red No. M. 2330 'SIDDHANTHAM

ACC.NO. 33773 Vol. 25—No. 4

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

25 | நந்தன சித்திரை 1952 ஏப்ரல் | இதழ்

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15

அறிக்கை

நெல்லை சித்தாந்த வகுப்பு

(தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் ஆதரவில்
நெல்லையில் இந்த ஆண்டு நடைபெறுகிறது)

திருநெல்வேலி சந்தியில் தருமபுரத்து மண்டபத்தில் 27 - 4 - 52 (ஞாயிறு) தொடங்கி 20 - 5 - 52 வரை 24 நாட்களில் மூன்று விடுமுறைகள் போகலாக 21 நாட்கள் நடைபெறும். நாள்தோறும் காலை 9-30 முதல் 11-30 வரை சிவஞானபோதமும் மாலை 3-30—5 வரை கேள்வி விடைகளும் நடைபெறும். இரவு 7 முதல் 8-30 வரை பேரறிஞர்களின் விரிவுரைகள் நடைபெறும்.

சாத்தூர் சித்தாந்தப் புலவர் - திரு. து. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் M.A., ஆசிரியராக இருப்பார். பேருரை நிகழ்த்துபவர்கள் : அருள் அருணாசல தேசிகர் உயர் ஈசான சிவாச்சாரியார், திரு. சிவகுருநாத பிள்ளை, முத்து. சு. மாணிக்கவாசகர் முதலிய பதினொருபேர் ஆவார். பயில்வோர்களுக்குத் தேர்ச்சி நடைபெறும். 25 பேர்களே தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்கு உணவு, உறையுள் அளிக்கப்படும். ஏனையோர்கள் தங்கள் சொந்தச் செலவில் படிக்கலாம். 'சிற்றுரை' ஒவ்வொருவரும் கொண்டுவரல் வேண்டும்.

பயிற்சி பெற விரும்புகிறவர்கள் வித்வான் அல்லது பல்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மற்றச் சில நிபந்தனைகளும் உண்டு. செயலாளர், 24 கீழரத வீதி, நெல்லைக்கு எழுதிக்கொள்ளலாம். ஆசிரியருக்கு 20 - 5 - 52-ல் பொன்னாடை போர்த்தப்படும். தமிழ் மக்களும் சைவ மக்களும் இந்த அருமையான நற்சமயத்தை இழக்காமல் வகுப்பில் சேர்ந்து ஓதுவார்களாக.

மேலும், திருப்பதியில் திருமலைமீது பொதுவான சமய வகுப்பு ஒன்று ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்றது. இந்த ஆண்டும் நடைபெறும். அதிலும் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளும் பாடமும் நடைபெறுகின்றன. நெல்லையிலும் திருமலையிலும் பாடம் நடத்துபவர்களே நமதுசமாஜ வகுப்புகளிலும் பாடம் நடத்துபவர்கள். ஆகவே இரண்டு மூன்று இடங்களில் நடைபெறுவதைக் காட்டிலும் ஒரே இடத்தில் பலரும் சேர்ந்தால் மிகவும் பயன் கிடைக்கும் என்று கருதி கோடைகாலச் சமாஜ வகுப்பை இந்த முறை நடத்தாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அச் செய்தியைப் பொதுமக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 25 | நந்தன சித்திரை 1952 ஏப்ரல் | இதழ் 4

நாட்டு ஒலி

1. எக்காலம் சிறந்தது :—நமது நாட்டில் மக்களிடை வழங்கிவரும் எண்ணப்போக்கை ஒருசிறிது கவனிப்போம். நாட்டுப்புறங்களில் ஆயினும்சரி, நகரப்புறங்களில் ஆயினும் சரி, படித்தவரிடமும், படியாதவரிடமும் ஒரே விதமாகச் சில எண்ணப் போக்குகள் இருக்கின்றன. நாட்டுப்புறத்தில் கல்வி இல்லாத குடியானவனிடமோ, அல்லது பண்ணையில் வேலைசெய்யும் ஊழியனிடமோ கேட்டுப்பாருங்கள். பண்டைய நாளில் இருந்த சிறப்பு இப்பொழுது இல்லை என்பான். நாளுக்குநாள் காலம் கெட்டுவருகிறது என்பதே அவனுடைய கொள்கை. நகரப்புறத்தில் உள்ள கல்விமானும் அவ்வாறே எண்ணுகிறான். 'முன்னாளில் எவ்வளவு நன்றாக வாழ்ந்தார்கள், இப்பொழுது என்வருந்துகிறோம்' என்பான். தற்காலத்தைக் காட்டிலும் முற்காலம் சிறந்தது என்பதே அந்த மனப்பான்மை. இந்த எண்ணப் போக்கிற்குச் சாதகமாக, பண்டைப் புராணங்களும் பாடுகின்றன. நான்கு யுகங்களிலே முதல் யுகமே சத்திய யுக மென்றும், அடுத்த யுகத்தில் தருமம் ஒருபங்கு குறைந்தது என்றும், மூன்றாவதுயுகத்தில் இரண்டுபங்கு குறைந்ததென்றும், நான்காவது யுகமாகிய தற்போது மூன்று பங்கு குறைந்துவிட்டதென்றும் நம்நாட்டுப் புராணங்கள் கூறும். அக்கூற்றையே நம்பி நாம் இடர்ப்பட்டு நம் வாழ்க்கையை இழிவு செய்து கொள்ளுகிறோம்.

ஆனால் மேல்நாட்டார்கள் வேறுவிதமாய் எண்ணுகிறார்கள். வளர்ச்சித் தத்துவம் என்ற கொள்கையைப் பின்பற்றிப் பண்டைய நாளில் இருந்ததைக் காட்டிலும் நாளுக்கு நாள் இவ்வுலகம் நலம்பெற்று வருகிறது என்பது அவர்களுடைய கருத்து. இதற்குச் சான்றுகளாக வரலாற்றுப் பகுதிகளை எடுத்துக் காட்டுகிறார்கள். அறிவைப் பெருக்கும் பொருட்டுக் கலைகளை ஆராய்கிறார்கள். புதுப் புதுக் கருவிகளை உண்டாக்கி வாழ்க்கையை இன்பப்படுத்துகிறார்கள். இவ்வாறு முற்போக்குக் கொள்கையினால் அவர்களுடைய வாழ்க்கை உற்சாகப்படுகிறது. "உலகம் நன்கே வளருகிறது" என்ற தலைப்பில் ஓர் ஆங்கிலக் கவி பாடின கவிதையில் அடியில் கண்ட கருத்து அமைந்த செய்யுள் ஒன்றைக் காண்கிறோம்.

"வரலாற்றுப் பகுதிகளை வரையறைத்துப் பார்க்கின்,
வகைவகையாய் நாடுகளோ வருடாப்தம் தேடின்,
குாலாற்றி யாம்வாழும் குடிகாலம் தன்னின்
கொடியனவாய் இறந்தாப்தம் கூடினதாய்க் காண்பீர் ;
சிாலாற்றும் ஆர்வமுடன் செவ்வெழுத்தும் சொல்லும்
சீர்பிரித்தும் அசைவகுத்தும் செம்மையுடன் ஆயின்,
நிாலாற்றும் இந்நாளின் நிலஉலகப் போக்கே
நெறியதனில் பண்டுதனின் நிறைநலத்தது அறிவீர்"

இச்செய்யுளில் கண்ட கருத்தின்படி இவ்வுலகம் நாளுக்குநாள் நல்ல நிலைமைக்கு வந்துகொண் டிருக்கின்றது என அறியலாம். வடநாட்டுப் புராணக் கருத்துக்களை ஒரு புறம் ஒதுக்கித் தமிழ்நாட்டுப் பெருமக்கள் கருத்துக்களை ஆராய்வோமானால், ஆங்கிலக்கவி சொன்ன கருத்திற்கே நாமும் வருவோம். வாதவூரடிகள் மணிவாசகத்தில் கூறிய "புல்லாகிப் பூடாய்" என்ற பகுதியை ஆராயுமிடத்து வளர்ச்சி தத்துவமே அதிலும் காண்கின்றோம். பொதுவாக உலகப்போக்கை ஊன்றிப் பார்க்குமிடத்து, கெடுதல் நிலையிலிருந்து நன்மை நிலைக்கே உலகு சென்றுகொண் டிருக்கிறது என்று அறிய வேண்டும். தமிழருடைய பண்டையக் கொள்கை இதுவாயிருக்க இப்போது நாம் என்ன காண்கின்றோம் ?

2. சமய நிலையங்களில் வளர்ச்சிப் போக்கு:— சில வாரங்களுக்குமுன் மேல்நாடுகளிலிருந்து ஒரு கலை நிபுணர் நம் நாட்டிற்கு வந்து வடமலை முதல் தென்குமரி வரை சுற்றி ஆராய்ந்தார். பாரதநாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று அங்குள்ள சமய நிலையங்களையும், அந்நிலையங்களிலுள்ள சிற்பச் சிறப்புகளையும் கண்டு மகிழ்ந்தார். ஆராய்ச்சியில் ஈடுபட்ட அவர் வெறுமனே திரும்பிப் போகவில்லை. தாம் பார்த்தறிந்த விஷயங்களைச் செய்தித்தாள்களில் வெளியிட்டார். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள சிறப்புக்களை ஒத்திட்டுப்பார்த்து ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக்காட்டினார். அவ்வாறு கூறுகையில் வடநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தென்னாட்டுச் சிற்பங்களே மேன்மையானது என்று கூறினார். தென்னாட்டிலும், இரண்டு சிற்ப நிலையங்கள் மிகவும் போற்றத்தக்கன என்கின்றார்.

இராசராசச் சோழன் கட்டிய தஞ்சை இராசராசேச்சுரமும், இராஜேந்திரச் சோழன் கட்டிய கங்கைகொண்ட சோளேச்சரமும் மற்றை எல்லாவற்றிலும் மிகச்சிறந்தவை என்று கூறுகிறார். தஞ்சைப் பெருங்கோயிலைப் பொதுவாக எல்லாரும் கண்டு களிக்கிறார்கள். ஆனால் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வெகுபேர் செல்வதில்லை. வழியும் வசதியும் சரியாக இல்லை. இதனால் தமிழ்மக்கள் தங்களுடைய பெருமைகளை அறியாதவர்கள் ஆகிறார்கள்.

இதுகிடக்க மேல்நாட்டு நிபுணர் சொன்ன கருத்தை நாம் அறியவேண்டும். "சோழர் பேரரசில் அக்காலத் தமிழ்மக்கள் அடைந்திருந்த பெருமையை இக்காலத்தார் அறியவில்லை. உலகிலேயே சிறந்த சிற்பக் கலைகளைத் தகுந்தபடி பாராட்டுவதற்கு மாறாக, பிற்காலத்து மக்கள் அவைகளுக்குக் கேடு விளைவிக்கிறார்கள். அருமையாகத் தீட்டப்பெற்ற கருங்கல் சிற்பங்களின்மேல், செங்கற் சுண்ணும்புப் பூச்சு இட்டுச் சிற்ப மேன்மையைக் கெடுத்திருக்கிறார்கள். என்ன பேதமை" என்று அப்பெரியார் எழுதியிருக்கின்றார்கள். மேலும், கருவறையைச் சுற்றியுள்ள திருஉள்நாழிக்குத் தன்னை விடவில்லை என்றும், அதனால் அதில் உள்ள சிறந்த ஓவியங்களைத் தான் பார்க்க இயலவில்லை என்றும் வருந்தி எழுதியிருக்கின்றார். தற்கால மக்களின் பிடிவாத

குணத்தில் கண்ட பலன் இதுதான். மக்களுக்கு உண்மை அன்பு எப்போது வருமோ ?

இம் மேல்நாட்டுப் பெரியார் கூறுகிற கருத்தைச் சற்று ஆராய்வோம். பத்து நூற்றுண்டுகளுக்கு முன் தமிழ் மக்கள் சிற்பம், ஓவியம் என்ற அருங்கலைகளில் சிறந்து விளங்கினுர்கள். அப்போது சோழர் பேரரசு மிகச் சிறந்து விளங்கிற்று. இப்போது அந்தச் சிற்பக் கல்வி எங்கே ? பிறகு ஐந்து நூற்றுண்டுகளின் முன் கருநாடகப் பேரரசு தமிழ் நாட்டை ஆளத் தொடங்கியது. அதுவும் சிற்பத்திற்கு ஆதரவு தந்தது. அது கன்னடப் பண்பாடு ஆனுலும் தமிழ்நாடு முழுவதிலும் சமய நிலையங்களை மேம்படுத்திச் சென்றது. சோழர்களுடைய சிற்பக் கலையை அழிக்காமல் அதற்குமேல் தம் சிற்பக் கலைகளை ஒட்டிச் சேர்த்தினுர்கள். அந்தக் கைங்கர்யத்தினுல் பெருங் கோயில்கள் ஏற்பட்டன. காளஹஸ்தி, காஞ்சி, சிதம்பரம், திருஅண்ணுமலை, மதுரை முதலியவைகள் அவர்களால் சிறப்பும் பெற்றன. ஆனுல் பின்னே வந்தவர்கள் என்ன செய்தார்கள் ? சிற்பக்கலையின் மேன்மையை மறந்தார்கள். அருமையான சிற்பங்களின் மேல் சுண்ணும்புப் பூச்சும், காறையும், சாயமும் இட்டு மறைத்தார்கள். சரித்திர ஞானத்தை அறவே மறந்து கல்வெட்டுகளை அழிக்கத் தொடங்கினுர்கள். மிலேச்சர்கள் செய்த கலை அழிவைக் காட்டிலும், சமயச் சார்பினர் செய்த அழிவே வலுத்துவிட்டது. திருப்பணி என்ற பெயரால் எத்தனை பழைய சிற்பங்கள் இடிக்கப்பட்டு மண்ணுக்குள் போயின. வழவழப்பே சிறந்தது என்ற கொள்கையினுல் எத்தனைக் கல்வெட்டுக்கள் செதுக்கப்பட்டன. சாயங்களே கண்ணைக் கவருவன என்ற கொள்கையினுல் எத்தனை சரிதச் சான்றுகள் மறைந்தன ! இவைகளை எல்லாம் ஆராயும் காலத்தில் பல நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ் மக்களின் நுண்ணறிவும் கலைஞானமும் தற்போது போய்விட்டன எனக் கூறலாமோ ?

மேலே கூறிய ஆங்கிலக் கவிஞனுடைய கருத்து என்ன ? இப்போது தமிழ் மக்கள் கையாண்டு வரும் கொள்கை என்ன? இவ்விரண்டிற்கும் வேறுபாடு இருக்கிறதல்லவா ? பொதுவாக உலகத்தில் எங்கும் தாழ்ந்த நிலையிலிருந்து மேலான நிலைக்கு மக்கள் வந்துகொண் டிருக்கத்

தமிழ் நாட்டில்மட்டும் மேல் நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்குப் போகலாமா? இது முரண்பாடாகத் தோன்றவில்லையா? வாதவூர் அடிகளுடைய வளர்ச்சித் தத்துவத்தை நாம் கைப்பிடிக்கும் பட்சத்தில் நமது சமய நிலையங்களில் உள்ள சிற்பக்கலைகளை அழிக்காம லிருப்பதோடு அவைகளின் முன்னேற்றமும் தோற்றுவிக்க வேண்டும். இப்படிச் செய்வதனால்தான் உலகத்தோடு ஒத்துவாழ முடியும்.

3. கலை வளர்ச்சி :—தென்னாட்டில் சமய நிலையங்களே கலைவளர்ச்சிக்கு ஏற்ற இடங்களாக இருந்தன. தென்னாடு மட்டுமோ? மேல்நாடுகளிலும்கூடச் சமய நிலையங்கள்தான் கலைவளர்ச்சிக்கு ஆதாரங்களாயிருந்தன. ரோமாபுரியில் உள்ள பிடர்தேவாலயம் உலகத்திலேயே சிறந்த ஓவியங்களைக் கொண்டிருக்கிறதாம். லண்டன் நகரத்து பால் தேவாலயமும் அதைப் போன்றதே. பௌத்த ஜெயின ஆலயங்களும் இஸ்லாமிய பள்ளிவாசல்களும் சிற்பச் சிறப்புக்குப் பேர்பெற்றவைகள். தமிழ்நாட்டுச் சமயநிலையங்கள் அவைகளுக்குச் சிறிதேனும் தாழ்ச்சியடையவில்லை. சிற்பம் ஓவியம், நடனம், இன்னிசை முதலிய எல்லா நற்கலைகளிலும் தமிழ்நாட்டுக் கோயில்கள் சிறப்புற்று இருந்தன. இப்போது அக்கலைகள் எங்கே?

சமய நிலையங்களால் உடலுக்கு ஆதாரமும் உயிருக்குச் சாந்தியும் ஏற்பட்டன. சில மக்கள் உயிருக்குச் சாந்தியிருந்தால் போதுமானது; உடலுக்கு ஆதாரம் வேண்டியதில்லை என்று கூறுகின்றனர். அது பண்டைப் பெருமக்களின் கருத்து அல்ல. திருமூலர் உயிரை உய்விக்கும் பொருட்டு உடலைப் போற்றுவதாகக் கூறுகின்றார். ஆகவே உயிருக்கு எத்தனை ஈடேற்றம் தரவேண்டுமோ, அத்தனை ஈடேற்றம் உடலுக்கும் தரவேண்டும். அதைக் கருதித்தான் சமயநிலையங்களில் உயிருக்கும் உடலுக்கும் ஒழுங்கு வைத்தார்கள். உயிருக்காக வழிபாட்டு முறை ஒருபுறம் ஏற்படுத்தியிருக்க உடலுக்காகவும் கலைகளை வகுத்தார்கள். சிற்பம், ஓவியம் முதலிய கலைகளை வகுத்து முன்னேறச் செய்தபோது அவைகளுக்கென்று பல நிபுணர்களை நியமித்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைத் தந்தார்கள். யாதொரு கவலையுமின்றித் தம்முடைய கலைகளில் ஈடுபடுவதற்காக வருவாய் வரக்கூடிய நிலங்களைத் தந்தார்கள். கலையில்

தேர்ந்த நிபுணர்களின் குடும்பங்கள் ஆலயத்தை ஒட்டி வாழ்க்கை நடத்தினுர்கள். தற்போது அக்குடும்பங்கள் எங்கே போயின ? சமய நிலையங்களைப் பரிபாலிக்கும் அதிகாரிகளுக்குக் கலை ஞானம் இல்லாமல் போய்விட்டது. ஆகவே கலைஞர்களுக்கு இருந்த ஆதரவு மறைந்தது. மற்ற நாடுகளில் முன்னேற்றம் ஓங்கிவரத் தமிழ்நாட்டில் குறையத் தொடங்கிற்று.

மற்ருெரு சிறு செய்தி: சமய நிலையங்களுக்கும் அருங்கலைகளுக்கும் தொடர்பு உண்டு. ஆகவே அருங்கலைகளைச் சமயநிலையங்கள் போற்றக் கூடும். ஆனுல் கைத்தொழில்களாகிய நெசவு முதலியவைகளுக்கும் கோயில்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது ? அப்படியிருந்தும் கோயில் அதிகாரிகள் நெசவுத் தொழிலாளர்களை ஆதரித்தார்கள். அச்செய்தி நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களின்மூலம் அறியலாம். இது ஜீவகாருண்யத்தைப் பொருத்திருக்கின்றதல்லவா? தற்போது இக்கருத்தை மக்கள் ஆதரிப்பார்களா? வரலாற்றுப் போக்கை ஒரு சிறிது ஆராய்ச்சி செய்யுங்கள், பிறகு உண்மை விளங்கலாம்.

---

2. தலப்பகுதி

திருஊறல்

(கோவை கிழார்)

1. இடம் :—இது தற்காலத்தில் தக்கோலம் என்ற பெயரால் வழங்குகிறது. வட ஆற்காடு வட்டத்தில் அறக்கோணம் - காஞ்சி இரயில் பாதையில் தக்கோலம் நிலயத்திலிருந்து கிழக்கே சென்ருல் இவ்வூரை அடையலாம். இந்தப்பாதையில் நெருங்கிய மரத்தொகுதிகள் இருக்கின்றன. ஊர் பெரியது. கொரத்தலையாற்றின் (கல்லாறு) கரையில் இருக்கிறது. மக்கள் தங்குவதற்கு மடங்கள் உண்டு. இவ்வூரில் 5000 சனத்தொகை உண்டு. தக்கோலம், கூவக் கிளைப்பாதையில் தக்கோலத்திலிருந்து 4 கல்லிலும், கூவத்திலிருந்து 7 கல்லிலும் இருக்கிறது.

2. கோயில் :—இவ்வூரில் சிவாலயங்கள் மூன்றும் மற்றக் கோயில்கள் பலவும் இருக்கின்றன. அவைகளில் சிறந்தது ஜலகண்டேசர் கோயில். இது செப்பனிடப்பட வில்லை. சுற்று மதில்களில் புல் பூண்டுகள் நிரம்ப முளைத் திருக்கின்றன. வடபுறத்தில் ஒரு நந்தவனம் உண்டு. அதுவும் கேவலமான நிலையில் இருந்தது. வடகிழக்கில் ஒரு தெப்பக்குளம் இருக்கிறது. கற்படிகள் உண்டு. ஆனால் பழுது பார்க்கப்படவில்லை. நிலதளவரிசை கரடு முரடாக இருக்கிறது. கருப்பக்கிரகத்தின் சுற்றிலுமுள்ள பரிவார தேவதைகள் மிக அழகாக இருக்கின்றன. அத் தேவதைகளின் உருவங்கள் சுவரிலேயே பொதிக்கப்பட் டிருக்கின்றன. பிள்ளையாரும் தக்ஷிணு மூர்த்தியும் பெரிய உருவங்கள். தக்ஷிணு மூர்த்தியின் காலடியில் முயலகன் இல்லை. சனகாதி முனிவர்களும் இல்லை. அத்திருவுருவத் தின் பீடத்தில் இரண்டு மான்கள் செதுக்கப்பட்டிருக் கின்றன. இவ்விதம் மாறுபட்ட திருவுருவம் வேறு ஆலயங் களில் காண்பதரிது. மகாவிஷ்ணுவின் சக்கிரம் பிரயோக பாவனையில் இருக்கிறது. பிரமதேவனுடைய உருவம் அழகாக இருக்கிறது. காளியின் உருவத்திலும் பிரயோக சக்கிரமே இருக்கிறது. அம்மன் பெயர் கிரிராஜ கன்னி காம்பா. அம்மன்கோயில் தென்புறத்திலே தனியாக இருக் கிறது. அதன் சந்நிதி வடக்குப்பார்த்திருக்கிறது. இவ் விதம் வேறு கோயில்களில் இல்லை. கோயிலின் சமயலறை பாழடைந்திருக்கிறது. வாகனங்கள் சீர் கெட்டிருந்தன. மகாமண்டபத்தில், தென்சுவரில் ஒரு சிறு உள் கட்டப் பட்டு அதில் விசுவநாதலிங்கம் வைக்கப்பட்டிருக்கிறது. கோயிலின் கோபுரம் மேற்கு நோக்கியிருக்கிறது. சுவாமி சுயம்புலிங்கம். அபிஷேகம் இல்லை.

3. மற்ற ஒரு கோயில் :—இவ்வூரில் உள்ள ஆற் றிற்குக் கல்லாறு என்று பெயர் கூறுகிறார்கள். இது வடக்கே ஓடி குசஸ்தலி அல்லது. கொரத்தலை ஆறு ஆகிற தாம். இதன் கரை ஓரத்தில், சுற்று நிலத்தின் மட்டத் திற்குக் கீழே கோயில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அதன் பெயர் கங்காதரீசுவரர் கோயில். மழைக்காலத்தில் வெள்ளம் வந்தால் இக்கோயில் நீருக்குள் அமிழ்ந்து நிற்கும். இப்போதும் கோயில் தளவரிசை மிகவும்

தாழ்ந்தது. எப்போதும் ஈரமாக இருக்கிறது. ஆற்றி லிருந்து ஒரு கால்வாய் பிரிக்கப்பட்டு இக்கோயில் கற்பக்ர கத்துள் ஓடி ஒரு நந்தியின் வாயில் வழியாக விழுகிறது. அது மறுபடி கற்பக்கிரகத்தைச் சுற்றிச் சென்று பிறகு மற்ெறாரு கால்வாய் வழியாக வெளியே போய் ஒரு நீண்ட சதுரக்குளத்தில் விழுந்து பிறகு ஆற்றில் சேருகிறது. இதனால் இந்தக் கோயில் எப்போதும் குளிர்ச்சியாகவே இருக்கும். அன்பர்கள் நந்தியின் முகத்திலிருந்து விழும் தீர்த்தத்தை அள்ளி அருந்திவிட்டுப் பிறகு தெப்பக்குளத் தில் நீராடுவார்கள். இந்த நீர் ஊற்றின் காரணமாகத் தான் இக்கோயிலும் ஊரும், திருஊறல் என்று பெயர் பெற்றன போலும். சுவாமியின் பெயரும் ஜலநாதர் என்று பெயர் பெற்றது போலும். இக்கோயிலும் பல ஆண்டுகளாகப் பழுது பார்க்கப்படவில்லை. உடைந்த கல் லிற்கு வேறு கல்வைக்காமல் முட்டிகொடுத்து வைத்திருக் கிறார்கள். இக்கோயில் மூலஸ்தான மூர்த்தி பளபளப் பான மரகதத்து நிறத்தில் உள்ளது. மூலஸ்தானத்தில் தென்மேற்கு மூலையில் அம்மன் உருவம் இருக்கிறது. வேறு மூன்று மூலைகளில் பிள்ளையார், விசுவநாதர், விசா லாட்சி திருவுருவங்கள் இருக்கின்றன. ஜலநாதர் கோயி லுக்கும் இக்கங்காதரர் கோயிலுக்கும் இடையில் ஒரு பாழடைந்த சத்திரம் இருக்கிறது. இக்கோயிலின் மூர்த்தி கல்லினால் ஆக்கப்பட்ட மூர்த்தி. ஆகவே இதற்குத் திரு முழுக்குச் செய்யலாம். அம்மன் பெயர் மோகன வல்லி அம்மை.

இக்கோயில்களை ஜலநாதர் மூர்த்தி யென்றும், கங்கா தரர் தீர்த்தம் என்றும், திருஊறல் தலம் என்றும் கூறுவர். இக்கோயிலுக்கு ஒரு ஏகர் நிலம் உண்டு. உற்சவங்கள் பொது மக்களால் நடத்தப்படுகின்றன.

4. மூன்றாவது கோயில்:—இக்கோயிலுக்குச் சொத்து அதிகம். செங்குந்தர்கள் இதை மிகுதியாக வழிபடுகிறார் கள். சுவாமியின் பெயர் சோமநாதசுவாமி. அம்மன் பெயர் இரத்தினவல்லியம்மை.

5. ஏனைய கோயில்கள் :—இவ்வூரில் சில பிள்ளை யார் கோயில்களும் இரண்டு அம்மன் கோயில்களும்

உண்டு. தக்காலி அம்மன், பாவாண்டியம்மன் என்பன. தக்காலி அம்மன் ஒரு பெரிய வளைவிற்குள் வடக்கு நோக்கி யிருக்கிறது. மூலஸ்தானத்தின் பேரில் வெள்ளைவிமானம் இருக்கிறது. இதனால் இவ்வூருக்குப் பெயர் வந்திருக்கலாம். மற்றொரு பெருமாள்கோயில் இப்போது பாழடைந்திருக் கிறது.

நூல்கள்:—இத்தலத்திற்கும் சம்பந்தர் தேவாரம் உண்டு. அது, “மாறில் அவுணர் அரணம் அவை மாய” என்ற பதிகம்.

மேலும் இதற்கு ஒரு தலவரலாறு உண்டு என்று கேள்வி. மற்ற பிரபந்தங்களைப் பற்றித் தெரியவில்லை.

கல்வெட்டுக்கள் :—இந்தக் கோயிலில் 19 கல்வெட்டுக் களின் பிரதிகள் எடுக்கப் பட்டுள்ளன. இராட்டிர கூடர், சோழர், குறுநில மன்னர்கள் முதலியோருடைய கல் வெட்டுக்கள் அவைகளில் உள்ளன. அவைகள் பெரும் பாலும் ஆலயத்திற்குப் பலபேர்கள் செய்த தானங்களைப் பற்றியன. நுந்தாவிளக்கு வைப்பதற்கு ஆடு, நிலம் முதலி யவைகளும், ஆராதனைக்கு நெல், நிலம் முதலியவைகளும், பொன், நகை, கட்டிடம் முதலியவைகளும் அவைகளில் கண்டிருக்கின்றன. இராட்டிரக்கூட மன்னர்களில் விமலா தித்தியன், கன்னரதேவன் முதலிய அரசர்கள் பெயர் களும், சோழர்களில் இராசகேசரி, பரகேசரி, பராந்தகன் I, இராஜேந்திரன், குலோத்துங்கன் I, வீர ராசேந்திரன், குலோத்துங்கன் III முதலிய பெயர்களும் குறுநில மன்னர்களில் பார்வதேந்திர மன்னன் பெயரும் காணப் படுகின்றன. இராட்டிரகூடமன்னர் கிருஷ்ணன் III என்ற அரசன் கச்சியும், தஞ்சையும் வென்றதாகக் கூறு கிறது. இதனால் ஆதகூர் கல்வெட்டு ஊர்ச்சிதப்படுகிறது. கிருஷ்ணனுடைய படைவீரன் பூதகன் என்றவன் 949—50 கி. பி. யில் சோழன் இராஜாதித்தியனுடன் போர் புரிந்து தக்கோலத்துச் சண்டையில் அச்சோழனைக் கொன்றதாகத் தெரிகிறது. ஆகவே கி. பி. 950ல் இந்த ஊரில் ஒரு பெரும் போர் நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

ஆதித்தியச் சோழன் I காலத்தில் ஆனித்திங்கள் சூரிய கிரகணத்தின் போது கங்க குலத்து ஒரு இளவரசன் ஒரு

வெள்ளிப்பாத்திரத்தை இந்தக் கோயிலுக்கு ஈந்தான். பார்வதேந்திரனுடைய அரசி அருள்மொழி நங்கை இறைவனுக்கு ஒரு கட்டில் மஞ்சம் தானம் செய்தாள். பராந்தகன் I காலத்துக் கல்வெட்டுக்கள் பல இருக்கின்றன. குலோத்துங்கன் III காலத்தின் திருக்காளத்திதேவ யாதவ ராயன் இக்கோவிலுக்கு நிலதானம் செய்தான்.

மேலும் விஜய நகர அரசர்கள் காலத்தில் கூறப்பட்ட நந்தி தீர்த்தம் என்ற பெயர் இவ்வூரின் பெயர் ஆகும்.

தக்கோலம் மணவிற் கோட்டத்துப் பன்மா நாட்டில் ஓர் ஊர் என்று கண்டிருக்கிறது. கல்வெட்டுக்களில் தக்கோலத்துத் திருவூறல் என்று கண்டிருக்கிறபடியால், தக்கோலம் என்பது ஊரின் பெயராகவும், திருவூறல் கோயில் அல்லது தீர்த்தத்தின் பெயராகவும் கொள்ளவேண்டும்.

சூரிய கிரகணத்தை விவரிக்கும்போது "ஆனித்தலைப் பிறையால் தீண்டின சூரிய கிரகணத்து" என்று கண்டிருக்கிறது. இதன் பொருளை ஆராய்க.

திருவூறலுக்குச் சேர்ந்த மற்ற ஊர்கள் சிறூர், கயத்தூர் என்பன.

மேலும் தக்கோலத்திற்கு க்ஷத்திரிய சிகாமணிபுரம் என்றொரு பேரும் இருந்தது. குலோத்துங்க சோழபுரம் என்ற பெயரும் ஏற்பட்டிருந்தது.

"புகழ்மாது விளங்க சயமாது விளம்ப" என்று குலோத்துங்கன் மெய்க்கீர்த்தியும் "திருவளர் திரள்புயத் திரு நிலவலைய" என்ற மெய்க்கீர்த்தியும் இருக்கின்றன. இரண்டாவது மெய்க்கீர்த்தி அம்மன் ஆலயத்தின் முன் பக்கம் ஒருதூணில் உள்ளது. பார்த்திவேந்திரனுடைய கல்வெட்டுக்கள் நான்கும் வெளிவந்துள்ளன.

இத்தனை விவரங்கள் கொண்ட கல்வெட்டுக்கள் இவ்வூரில் இருக்கிறபடியால் இவ்வூர் மிகச் சிறப்பும் செழிப்பும் வெகு நூற்றாண்டுகளாகப் பெற்றிருக்கவேண்டும் என்று அறியலாம்.

4. சாத்திரப் பகுதி

சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

(தருமையாதீனப்புலவர், சித்தாந்தரத்நாகரம், வித்வான்,
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி)

(மலர் 25. இதழ் 3. பக்கம் 89-ன் தொடர்ச்சி)

(சுசு) இருணனி யிரவி தான்வந் திரித்தலு மிரவி லெண்ணும்
பொருணிலை கண்டு மாந்தர் பொருந்திடு மாறு போல
மருணிலை யெங்கு நீங்க மகிழ்ந்துயிர் தன்னுண் மன்னு
மருளையு மொழிய ஞாலத் தறிந்தவா றறியு மன்றே

என்பது, கதிரவன் தோன்றி இருளைப் பெரிதும் ஓட்டி யதும், மக்கள் பகலிற் காண்டல் வேண்டுமென்று இரவில் எண்ணியிருக்கப்பெற்ற பொருள்களின் நிலைமையைக் கண்டு, அக்கதிரவன்றுணையாலறிந்தோமென்று கருதாமல், தாமே கண்டறிந்தோமென்று கருதி அவற்றிற் பொருந்து மாறு போல, உயிர்களும் மலத்தினிலைமை புலன்களை நுகருமிடமெங்கும் கலாதி தத்துவங்களாலே நீங்குதலால் மகிழ்ந்து, அம்மலத்தை நீக்கத் தம்முள்ளே நிலையாக நின்று, அக்கலாதிதத்துவங்களைச் செலுத்தியுணர்த்தும் பேருதவியைச் செய்யுந் திருவருளையும் மறந்தொழிவதால், இவ்வுலகில் உள்ளதனைத் தாமே அறிந்த வண்ணம் அறியும் என்றதாம்.

உவமத்துள், இரவிவரவு இருளிரிதற்கும், அவ்விரிதல் பொருளின் நிலை காண்டற்கும், அக்காட்சி அவற்றைப் பொருந்தற்கும் ஏதுவாதலும், பொருளுள், அருளினது மன்னுதல் மருணிலை நீக்கத்திற்கும், அம்மருணீக்கம் உயிர்மகிழ்ச்சிக்கும், அம்மகிழ்ச்சி அருளை மறந்தொழிதற்கும், அவ்வொழிவு தாமே அறிந்தவாறறிதற்கும் ஏதுவாத லும் உணர்க.

இதனால், சிவசிற்சத்தி அறிந்தறிவித்து வருவதும், உயிர் அறிந்துவருவதும் ஆகிய உண்மையுணர்த்து முகத்

தால், கதிரவனைப் போல இறைவன் அவிகாரி என்பதும் உயிர்க்கு இயல்பாகச் செய்தியில்லை எனல் பொருந்தாது என்பதும் எல்லாம் சிவன் செயலாதலை அறியாது செய்வன யாவும் உயிர்ச்செய்கையாய்(ப் பயனாகிய) இன்ப துன்பங்களைப் பயப்பன என்பதும், உயிர் தன் இருவினைக்குத் தக்க இன்ப துன்பங்களை நுகர்தல் போலச் சிவ சிற்சத்தி உயிர்க்குறும் அப்பலன்களை நுகர்தலில்லை என்பதும் பெற வைத்தார்.

பொருள்களை அறியாவாறு கண்ணை மறைக்கும் புறத்திருளை இருளிலழுந்துவோர் ஏவுதலின்றித் தானே கதிரவன் தோன்றித் தன் கதிரால் இருளைப் போக்குமாறு பொருள்களிடத்திலும், பதிந்து காணுமாறு கண்களிடத்திலும் கலந்து நின்ற இடத்து விடிந்ததும் காணவேண்டுமென இரவெல்லாம் எண்ணியிருந்த பொருளையே அவ்வவ்வுயிர் கண்டெடுத்துக் கொள்ளும் முறைமை உவமை.

இறைவன் பரதந்திரனாகாது சுதந்திரனாகவே அறிந்தும் அறிவித்தும் நிற்க, அவ்வவ்வுயிர் தத்தம் விருப்பின்படி விளைந்த இன்ப துன்பங்களை அறிவது உவமேயம். அவரவர் விருப்பின்படி வேண்டிய பொருளை அறியுமிடத்து அவ்வாறே அறிவித்து, அதனால் ஒருவிகாரமும் அடையாத கதிரவன்போல இறைவனும் அவிகாரியே. கதிரவன் துணையால் அவரவர் தத்தம் விருப்பின்படி அறிதல் போல இறைவன் துணையால் உயிர்கள் தத்தம் விருப்பின்படி அறிதலால் உயிர்கட்கு இயல்பாகச் செய்தி உண்டு. இரவில் எண்ணிய பொருள்களைப் பகலில் விளக்குங் கதிரவன் மறத் தொழிலுடையவனல்லனாதல் போலக் கேவலத்தில் தேடிய வினைக்கீடாகச் சகலத்தில் உதவும் இறைவனும் மறத்தொழிலுடையனல்லன். சிவசிற்சத்தி எல்லாவுயிர்க்கும் பாசநிவர்த்தியாகும் பொருட்டு, அவற்றினுள் நிலை பெற்றிருந்துணர்த்தி வருகின்றது. அவ்வுணர்த்தும் பெரிய உபகாரத்தை அறிந்து நன்றி செலுத்துங்கடன் உயிர்க்குண்டு. உலகவர் கதிரவன் துணையால் அறிதலும் செய்தலும் உடையரேனும் யாமே அறிந்தோம் யாமே செய்தோம் என்றிருப்பர். அவ்வாறே உயிர்களும் இறைவனது சிற்சத்தி சகாயத்தால் அறிதலும் செய்தலுமுடையரேனும் யாமேயறிந்தோம் யாமே செய்தோம் என்று அவ்

வினைகளின் பயனை நுகரும். நுகரவே அவ்வினைப்பயன்களை இறைவன் நுகர்தல் பொருந்தாது. அவை எம் செயலல்ல இறைவன் செயல் என்று உணர்ந்து, உணர்ந்தவாறே ஒழுகின்,"அவன் இவனாய்நின்றமுறை ஏகனாகிஅரன்பணியினின்றிடவும் அகலும் குற்றம்" என்னும் உண்மைப்படி, "சிவனும் இவன் செய்தி யெலாம் என்செய்தி என்று" "பவமகல உடனாகி நின்று கொள்வன்." அது பாதகமாயினும் அருட்பரிசு பெறுவிக்கும். இச்சிவஞானம் தன்னைப் பெற்றொழுகுவாரையே சார்ந்து நெருப்பாய் நின்று, அவர் தம் அகந்தை மமதைகளைப் பற்றி, வெதுப்பி, நிமிர்த்துச் செவ்வே நிறுத்தும். அதுவே ஊன் செய்யாதது. அஃது உதித்தாலன்றி ஒருவருக்கும் இருசெருக்கும் ஒழிதலில்லை.

இத்திருவிருத்தத்துள், 'பொருந்திடுமாறு போல' என்றும் 'ஞாலத் தறிந்தவாறு' என்றும் இருமுறை 'ஆறு' என்னுஞ் சொல்லாட்சி உள்ளதை நோக்கின், ஏனையோர் உரை பொருந்தாமை காணலாம். இருள் மருட்கும், இரவி அருட்கும், இரவு ஞாலத்திற்கும், மாந்தர் உயிர்கட்கும் கண்டவாறு பொருந்துதல் அறிந்தவாறறிதற்கும் ஒப்பாதலறிக. எங்கும் நீங்கல் இருட்கும் மருட்கும் பொது. மகிழ்தல் மாந்தர்க்கும் உயிர்க்கும் பொது. தன்னுள் மன்னும் அருள் என்றதால் மாந்தர் கண்ணுள் மன்னுங் கதிர் என்பது பெறப்படும். இரவிற் கருதிய பொருளும் ஞாலத்தில் நுகரும் இன்ப துன்பமும் ஒப்பாம். இரவுக்குவமேயமாங் கேவலத்தையும் பகலுக் குவமேயமாஞ் சகலத்தையும் குறித்துப் பொதுவாய் நின்றது ஞாலம் என்பது.

மகிழ்தலைச் சிவ சத்திக் கேற்றினருமுளர். அருளையும் ஒழிய என்ற இடத்து, ஒழிதல் மறந்தொழிதலைக் குறித்தது. நீங்க எனலும் பொருந்தும். அருளையும் என்றது சிறப்பும்மை. 'எங்கும்' என்றது உயிர்கட் குறும் அவதாரம் எங்கும் என்றபடி.

(தொடரும்)

1. சம்பந்த சரணலய சுவாமிகள்

[வித்துவான்- தி. பட்டுச்சாமி ஒதுவார், திருச்சி]

"பாண்டி நாடே பழம்பதி" என மாணிக்கவாசகரால் புகழ்ப்பெற்ற தென்பாண்டி நாட்டின்கண் திகழும் திருநெல்வேலியில்* பரம்பரைச் சுத்த சைவ வேளாளர் மரபிலே சம்பந்த சரணலய சுவாமிகள்† தோன்றியவர் ஆவர். இவர் கருநிறமும் உயர்ந்த தோற்றமும் உடையவர்; இளமையிலேயே கணக்காயர் ஒருவரிடம் தமிழ் நெடுங் கணக்கைப் பயின்று நுண்ணறிவும், நற்குணமும், நல்லொழுக்கமும் பெற்று விளங்கியவர். அக்காலத்துத் திருநெல்வேலிச் சிந்து பூந்துறையில் தருமை யாதீன மடாலயத்தில் வீற்றிருந்த ஸ்ரீமத் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளிடம்‡ இவர்

---

*இதனைச் சிலர் யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலி என்பர். இங்கு, இன்னும் சுவாமிகளது மரபு விளங்குகின்றது எனவும் கூறுவர்.

†இப்பெயர் தருமையாதீனம் 6-வது குருமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகரால் அளிக்கப்பட்ட தீட்சா நாமம். இவரது இயற்பெயர் இன்னது என்று புலப்படவில்லை. திருஞானசம்பந்த தேசிகர் திருவடிகளைத் தமது மனமாகிய கோயிலின்கண் இருத்தி இடைவிடாது வழிபட்டவர் ஆதலால், இவர் சம்பந்தசரணலயர் எனப் பெயர் பெற்றார் என்பர்.

‡இவர்கள் திருவாரூரில் தோன்றியவர்கள்; ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளிடம் காசியில் வடமொழி தென்மொழிகளைப் பயின்று, தருமை யாதீனத்து 5-வது குருமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகரிடம் சைவ சந்நியாசமும் ஞானோபதேசமும் பெற்றவர்கள்; சிந்துபூந்துறையில் பலகாலம் வீற்றிருந்தபோது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலியோர்களுக்கு விசேட கல்விஞானத்தை ஊட்டியவர்கள்; தருமையாதீனத்து ஆதிகுருமூர்த்திகளாகிய குருஞானசம்பந்தர் இயற்றிய முத்தி நிச்சயப் பேருரை கண்டவர்கள்; இறுதிக் காலத்தில் சிதம்பரத் தலத்தில் வசித்து நடராசப் பெருமான் திருவடி நீழலில் கலந்தவர்கள்.

சென்று வடமொழியையும் தென்மொழியில் நிகண்டு, இலக்கணம், தருக்கம் முதலிய கருவி நூல்களையும், இலக்கியங்களையும், நீதி நூல்களையும் நன்கு கற்றுணர்ந்தார். அதனால் இவர் கவிபாடும் வல்லமையும், பேசுந்திறமையும் பெற்றதோடு குருலிங்க சங்கம பக்தியிலும் முதிர்ச்சியுற்றார்.

பிறகு, இவர் பழவினையின் துணையினால் திருக்கயிலாய ப்ரம்பரைத் தருமபுர ஆதீனத்து ஆறாவது பட்டத்தில் சைவ சித்தாந்த ஞானபானுவாய் எழுந்தளியிருந்த ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்* அவர்களை அடைந்து சமய விசேட தீட்சைகளையும் யாத்திரா காஷாயமும் பெற்று, அவர்கள் திருமுன் சிவாகமங்களையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும், பண்டார சாத்திரங்களையும் ஐயந்திரிபற ஓதி உணர்ந்து, நித்திய கருமானுட்டானம், பஞ்சாட்சர செபம், சிவபூசை, சிவாலய தரிசனம் முதலிய சைவ சமய வொழுக்கத்திலே மிக ஈடுபட்டுத் தம் குருமூர்த்திகளை இடை விடாது இதய கமலத்தில் தியானித்துக்கொண்டு வரலானார்.

---

*இவர்கள் அருட் செங்கோல் செலுத்துங்காலத்தில்தான் அகாராதி முதலிய சோடச கலைகளையும் அடக்கியிருந்து யோகஞ் செய்யும் இடமாகிய பதினாறேடுக்கம் மிகச் சிறப்புற்று விளங்கியது என்றும்; அதில்பல, அடியவர்கள் இரவு பகலின்றி நிட்டைகூடி இருந்தனர் என்றும் கூறுவர். (இப்பதினாறொடுக்கம் இன்றும் தருமையாதீன மடாலயத்திலுள்ள ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருத்தளியின் சுவரில் அமைந்துள்ளது.) இவர்கள் தென்தேச யாத்திரை செய்யும்போது திருநெல்வேலி அறச்சாலை மடத்திலிருந்த தமிழாகர முனிவருக்கு ஞானோபதேசஞ் செய்தார்கள். பின்பு திருக்குற்றாலத்தை யடுத்த வேள்விமலை முருகனை வழிபட்டபோது, அங்கு வள்ளியம்மையின் திருவுருவம் புலப்படவில்லை. அதனால், இங்கு 'வள்ளித்தாய் இல்லையோ' என்று வினவினார்கள். 'தாய் இதோ இருக்கின்றேன்' என்று வள்ளியம்மையார் திருமேனி விளைந்து காட்சி வழங்கத் தரிசனம் செய்தார்கள். இவர்கள் பரிபூரணமடைந்த தலம் திருக்குற்றாலம் ஆகும். இவர்கள் காலத்தில்தான் முத்தி நிச்சயப் பேருரை எழுந்ததாகும். இவ்வுரைநூல் தருமையாதீன வெளியீடாக வெளிவந்துள்ளது.

ஒருநாள் இவர் தமது பரமாசாரிய சுவாமிகளிடத்தில் பிறவிப் பெருங்கடலைக் கடக்கப் பெரும்புணையாகிய சைவ சந்நியாசத்தைப் பெற விரும்பினின்றார். அப்போது குருநாதர் அவர்க்கு மந்திரகாஷாயம் (சைவ சந்நியாசம்) அளித்து, ஞானதீட்சையும், ஞானோபதேசமும் செய்து, ஞானபூசையருளி, 'சம்பந்த சரணாலயர்' என்ற தீட்சாநாமம் சூட்டி ஆட்கொண்டருளினார். சம்பந்த சரணாலய சுவாமிகள் திருஞானசம்பந்த தேசிகரிடம் மிகுந்த அன்பும் பக்தியும் நீங்காத அடித்தொண்டும் பூண்டு சிவஞானங் கைவரப் பெற்றவராய் அடியார் குழாத்துடன் தருமையம் பதியில் வசிக்கலானார். அப்போது, தம்மையடுத்த அன்பர்களுக்குக் கல்வி புகட்டிக் கொண்டும், புராணப் பிரசங்கம் முதலியன செய்துகொண்டும் வந்தார். அதனால், சுவாமிகளது புகழ் நாடெங்கும் பரவலாயிற்று.

அச்சமயம் கன்னடம், தெலுங்கு, தமிழ் முதலிய பாஷைகளில் வல்லவரும், முருகக்கடவுளிடம் பக்தி கொண்டவரும், மைசூர் மகாராஜாவுமாகிய 'கர்த்தர்' என்பவர் சம்பந்த சரணாலய சுவாமிகளின் பெருமைகளைக் கேட்டறிந்து, தமக்கு ஏற்பட்ட சாத்திர சம்பந்தமான சந்தேகங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு அவர்கள் நட்பைப் பெரிதும் விரும்பி நின்றார். சுவாமிகளும் குருநாதரிடம் விடைபெற்றுக் கொண்டு மைசூரை அடைந்து புலவர்கூடிய அரசவையில் சிறப்புடன் எழுந்தருளினார்கள். அப்போது மைசூர் மன்னர் சுவாமிகளது கரிய திருமேனியின் தோற்றப் பொலிவைக் கண்டு தம் மருகிருந்தாரை நோக்கி, "இவர் ஒரு அண்டங் காக்கையோ" என்று நகையாடி வினவினர். உடனே சுவாமிகள் புன்னகை கொண்டு, "அது நான் அல்ல; தாங்களே" என்று பதிலளிக்கையில் அரசரின் முகம் மாறுபட்டு விளங்கிற்று. அதனைக் கண்ட சுவாமிகள் மீண்டும் அரசரை நோக்கி, "மன்னர் பெருமானே! யாம் கூறியவற்றை ஏதோ தவறாக நினைந்தீர் போலும்; அண்டத்தை (உலகத்தை)க் காவல் புரியும் வல்லமை உமக்கே அன்றி எமக்கு ஏது? ஆதலின், அவ்வாறு புகன்றேன்" என்று கூற, அரசர் மிக்க மகிழ்ச்சியடைந்து தமது ஐயவினாக்களை நிகழ்த்தி அவைகளுக்குச் சுவாமிகள் கூறும் அமைதியையே விடையாகக்கொண்டு தெளிவுற்றார்.

பிறகு, அரசர் வேண்டுகோளின்படி சுவாமிகள் சமஸ்தானத்தில் தங்கியிருக்கும்போது, அரசரால் அனுப்பப் படும் உணவுப் பொருள்களைப் பிறர்கொள்ளத் தாம் சிறிதும் உபயோகிக்காமல் மதுகரி பிட்சை* எடுத்துக் கொண்டு தமிழ்க் கல்வியையும், சைவசமயப் பிரசாரங்களையும் அங்கு பரப்பி வரலானுர். அதனையறிந்த அரசர், 'எவ் விதத்திலேனும் சுவாமிகள் நமது அன்னத்தைப் புசிக்கும் படி செய்யவேண்டும் என்று நினைத்து, ஒருநாள் சுவாமிகள் பிட்சை ஏற்கும் இல்லங்கள் தோறும் தமது உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துச் சுவாமிகளுக்குத் திருவமுது செய்வித்தார் என்பர்.

மைசூர் கர்த்தர் அவர்கள் ஒருநாள் சுவாமிகளை நோக்கி, "கச்சியப்ப சிவாசாரியர் இயற்றிய கந்தபுராணத்தை யாவரும் எளிதில் உணரும் பொருட்டுச் சுருக்கி விருத்தப்பாவால் ஒருநூல் செய்து அளித்தருளுதல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். சுவாமிகள் அரசர் விருப்பிற் கிணங்கி, ஒரு நன்னுளில் 'போங்கு' என்னும் மங்கல மொழியில் தொடங்கி, அடைமொழி மிகுதியுமின்றி, கந்தபுராணப் படியே, உற்பத்தி காண்டம், அசுரகாண்டம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் என, ஆறுகப் பகுத்துக் கொண்டு, அதன் 10034–பாடல்களையும் கதையமைப்பு விடாமல் சுருக்கித் தெய்வமணங் கமழப் பொருட்சுவை, சொற்சுவை தோன்ற 1048–பாடல்களால் பாடிமுடித்துக் 'கந்தபுராணச்சுருக்கம்† எனப் பெயரிட்டார்.

பின்பு, சம்பந்தசரணுலய சுவாமிகள் அரசர் முதலாயினுரோடும் திருச்செந்தூர் அடைந்து, சண்முகப்பெரு

---

*இது, வண்டானது ஒருபூவிலிருந்து அதனை வாதியாமல் பல பூக்களிலுஞ் சென்று சிறுகச் சிறுகத் தேனைக் கைக்கொள்ளுதல்போல, விரத்தனுனவன் ஒருவரை வாதியாமல் பலரிடத்தும் சென்று சிறுகச் சிறுக அன்னம் வாங்கிப் புசிப்பதாகும்.

†இந்நூல் பலாலும் பெரிதும் போற்றப் படுவதோடு ஐப்பசி மாசத்துக் கந்தர் சஷ்டியின்போது சைவர்களால் மிகச் சிரத்தையுடன் பாராயணம் செய்யப்படும் பெருமை வாய்ந்ததாகும்.

மானின் சந்நிதியில் பெரும்புலவர்களும் அடியார்களும் குழுமியிருந்த பேரவையில், 'கந்தபுராணச் சுருக்கம்' என்ற நூலை அரங்கேற்றியருளினர். அப்போது, அரசர்பிரான் மிகமகிழ்ந்து, ஒரு பொற்றட்டிலே நவரத்தினங்களை நிறைத்துச் சுவாமிகளுக்குச் சன்மானமாக அளிக்க, சுவாமிகள் அதனைப் பெற்று, 'இது குருவுக்குப் பிரீதியாகுக' என்று அப்பால் வைத்தருளினர். பின்னரும் அவ்வாறே அளிக்க, 'இது சிவனுக்குப் பிரீதியாகுக' என்று பக்கத்தில் வைத்தருளினர். அதன் பின்னரும் அவ்வாறே அளிக்க, 'இது சிவனடியார்களுக்குப் பிரீதியாகுக' என்று வாங்கி அப்பால் வைத்தருளினர். அரசர், சுவாமிகள் தமக்கென ஒரு பற்றுமின்றி வாழும் துறவற முடையவர் என்பதை யறிந்து அவர்களை நகர்வலம் செய்வித்துத் தரிசிக்க மிக விரும்பினர். அப்போது சுவாமிகள், "எமது குருவாணையின்றி அதற்கு உடன்படேன்" என்று மறுத்துரைத்தனர். அதுகேட்ட அரசர் தமது கருத்தைத் தருமையில் எழுந்தருளியிருக்கும் அவரது குரு மகாசந்நிதானத்திற்குத் தெரிவித்து அனுமதி பெற்றுச் சுவாமிகளைச் சிறப்புடன் நகர்வலம் செய்வித்து மகிழ்ந்தார்.

ஒருசமயம் அரசர், சுவாமிகளை நோக்கி "தருமபுரத்தில் தங்கள் குருஸ்தானத்தில் நாடோறும் சீடர்கள் செய்யும் தொழில் என்ன" என்று வினவியபோது, சுவாமிகள் சற்றும் தாமதியாமல்,

"ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ;ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாம்;கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் ; சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் ; கமலையுள் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே"

என்ற பாடலால் பதிலளித்தனர். அதனைக்கேட்ட அரசர், "தருமையடியார்களின் தன்மையே இங்ஙனமாயின் அவர்கள் ஆட்கொள்ளும் ஞானாசிரியரின் பெருமையினை அளவிடற்கரியதோ" என்று உணர்ந்து நிறைந்த பொருளைத் தருமை யாதீனத்திற்கு அனுப்பி, ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு நாடோறும் அபிஷேகிக்க ஆண்டுகள் தோறும் கபிலைப் பசுக்களை அனுப்புவதாகிய ஒரு வழக்கத்தையும் ஏற்படுத்தினர்.

பின்னர், சம்பந்த சரணாலய சுவாமிகள் அரசரிடம் விடைபெற்றுப் பல சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு தருமபுரத்தை அடைந்து தமது ஞானாசிரியரான ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர் மீது, 'சிகாரத்னமாலை' என்ற ஒரு துதிநூல் பதினொரு பாடல்களில் பாடித் துதித்து, முக்காலத்திலும் குருதரிசனம் செய்துகொண்டிருந்து ஒரு நன்னாளில் இறைவன் திருவடி நீழலை அடைந்தருளினார்கள்.

ஸ்ரீமத் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளிடம் சம்பந்தசரணாலய சுவாமிகளும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் கல்வி பயின்றனர் என்றும், ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகரிடம் சம்பந்த சரணாலய சுவாமிகளும் நெல்லைப்பதி அறச்சாலை மடத்துத் தமிழாகர முனிவரும் ஞானோபதேசம் பெற்றனர் என்றும் வரலாற்றால் அறியக் கிடக்கின்றன. சிவப்பிரகாச சுவாமிகள், 'பிரபுலிங்கலீலை' என்னும் நூலை கி. பி. 1652–ல் இயற்றினார் என்பதும் தமிழாகர முனிவர், 'பிராயச்சித்த சமுச்சியம்' என்னும் நூலைக் கொல்லம் ஆண்டு 808 (கி. பி. 1633) ஆங்கிரச மாசி பௌர்ணமி அன்று இயற்றினார் என்பதும் அந்தந்த நூல்களினின்றும் தெரிய வருவதால், ஸ்ரீமத் சம்பந்தசரணாலயசுவாமிகள் காலம் கி. பி. 17-ம் நூற்றாண்டின் இடைப்பகுதி ஆகும்.

---

2. சிவப்பிரகாசர் கண்ட மணிவாசகர்

(அ. தா. ப. திருஞானசம்பந்தன், திருவண்ணாமலை)

சிவப்பிரகாசர் ஒரு வீரசைவர். அவர் சைவ உலகத்திற்கே ஒளி யெனின் பொருந்தும். நாளும் பல அவம் பெருக்கியே காலங் கடத்தும் புலவர்கள் இன்றெழுவதைக் காண்கிறோம். சிவம் பெருக்கி வாழும் புலவர்களையோ, கவிஞர்களையோ அதிகம் இன்று காண்கிறோமில்லை. விரல் விட்டு எண்ணத் தகுந்த அளவில் ஒரு சிலரேயுள்ளனர். நம் சிவப்பிரகாசர் சிவம்பேணி வாழ்ந்த பேரறிஞர். சிவத்தைப் பேணிய அடியவர்களை, உச்சிமேல் வைத்து உயர்வுடைய பெருமக்களெனப் பாராட்டும் நிலை சிவப்பிரகாச

ரிடமே அமைந்துள்ளது. அடிகளாரியற்றிய நூல்களை ஒருவர் படிக்க ஆரம்பிக்குங் காலத்தே, தெள்ளிய அறிவு பெறுவர் என்பதுந் திண்ணம். அடிகளார் இயற்றிய பாடல்களும், பதிகங்களும் பலவாகும். பிரபுலிங்கலிலை, சோணசைலமாலை, பெரிய நாயகி விருத்தம், பெரிய நாயகி கலித்துறை, பிக்ஷாடன நவமணிமாலை, நால்வர் நான்மணிமாலை போன்றவையாம்.

நால்வர் நான் மணிமாலை மொத்தம் 40 பாடல்கள் கொண்டிலங்குவது. இம் மாலையில் சைவ சமயக்குரவர் களான நால்வர் ஏற்றங் கூறப்படுகிறது. அங்ஙனம் கூற வந்த அடிகளார், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரை வெண்பாவாலும், திருநாவுக்கரசு பெருமானைக் கட்டளைக் கலித்துறையாலும், சுந்தரமூர்த்தி நாயனாரை விருத்தத் தாலும், மாணிக்கவாசகர் பெருமானை அகவற்பாவாலும் பேசிச் செல்கிறார். இவண் நாம் ஆய வேண்டியது நால்வர் நான்மணிமாலையில் சிவப்பிரகாச அடிகளார் மாணிக்க வாசகர் பெருமானை எப்படிப் போற்றி வந்தித்து வழிபா டியற்றுகிறார் என்பதேயாம். மற்றைய சமய குரவர்களைப் பின்னர் காண்போம்.

நாம் ஓர் அன்பரிடம் சென்று உமக்கு வேதம் உயர் வுடையதெனத் தோற்றுகிறதா? அன்றி வாதவூரர் இயற்றிய திருவாசகத் தேன் உயர்வுடையதெனத் தோற்று கிறதா? என்ற வினாக்களை எழுப்புவதாகக் கொள்வோம். வேதத்தின்பால் உறழ்ந்த கண்மூடி பக்தி உடையவராய் இருந்தால் அவரோ சிறிதும் தயங்காது வேதத்தைவிட சிறந்ததொன்று உலகிடையில்லை எனவே மொழிவார். இறைவனே வேதத்தின் கருப்பொருளாய் உள்ளான் என்பது போன்ற போலிக் காரணங்கள் காட்டி வேதத் திற்கே இல்லாத புகழை அணிந்து மகிழ்ந்து நிலை நாட்ட வும் முயல்வார். ஆனால் நாம் சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்து, ஒரு பக்கல் நின்று ஏற்றம் பேசாது, உண்மையை ஆய்ந்து, மெய்ப்பொருள் இது வென நிலைநாட்டும் சிவப்பிரகாசரிடம் சென்று முன்னர் எழுப்பிய கேள்வியைப் போட்டுப் பார்க்கலாம். அவர் அதற்கு என்ன பதில் இறுக்கிறார் என்பதைக் கண்டு உணர்ந்து இன்புறுவோமாக!

தம் உடலில் பாதியைப் பகிர்ந்து, உமைக்கு அருளிய சிவபெருமானே உரைத்த வேத மொழியோ, அல்லது பழைமையான இறைவன் தொன்னிலையை எடுத்துக்காட்டி அவனருளில் இலயிக்க வைக்கும் வாதவூரன் இயற்றிய திருவாசகத் தேனோ? எது சிறந்தது? என்று அடிகளை வினவினால், அதற்கு அவர்தரும் விடையாவது :—"வேதம் ஓதப்படுகிறது; அதுகாலை அதனைக் கேட்டு நெஞ்சம் நெக்குருகி, நின்று இறையருளிற் படிந்தவரைக் கண்டதுண்டா? அன்றி கேட்டதுதான் உண்டா? இல்லையல்லவா? ஆனால் திருவாசகமெனுந் தீந்தமிழ்த் தேன் பாடல்களை ஒருவர் படித்தாலும் படிக்க ஒருவர் பக்கல் நின்று கேட்டாலும் மனம் என்னுகிறது? கருங்கல் ஒத்த மனமாய் இருப்பினும் அஃதும் கரைகிறது. மணற் கேணியன்ன கண்களில் ஆனந்தத்தால் நீர் மல்குவதும் அதனோடு மயிர்க் கூச்செரிந்து அன்பராக்கும் பெற்றி இவற்றிற் கன்றோ அமைந்துள்ளது" என அடிகள் கூறி உண்மையை ஆய்ந்து கொள்ள நம்மை விடுகிறார். இதனால் வேதம் தாழ்வுடையது பயனற்றது என்று அடிகள் பொருள் கண்டார் இல்லை. மணிமொழியின் உயர்வை நோக்குங்கால் வேதம் தாழ்வுடையதே என்பது அடிகளின் கருத்து. ஏனைய நூல்களைக் காணுங்கால் வேதம் உயர்வுடையது என்பதே அடிகளாரின் நோக்கு. சமீப காலத்தில் விளங்கிய சோதி - ராமலிங்க அடிகளாரும் திருவாசகத்தின் பெருமையைக் கூற வருங்காலத்து நம்மை எவ்வளவு இன்பத்திற் குள்ளாக்குகிறது. வள்ளலார் என்ன கூறுகிறார்? மாணிக்கவாசகருடைய் திருவாசகத்தை ஒருவர் ஆழ்ந்து படிக்குங்கால், படிப்பவர் உள்ளத்தில், பால் கலந்து, தேன் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலக்கப் பெற்று, ஊனும் உயிரும் கலக்கப்பெற்ற உவட்டாத இன்பநிலை அடைவர் என்றல்லவா? விளம்புகிறார்.

அகவல்

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசேர் பாவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ

யாதோ சிறந்த தென்கு வீராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே.

அடுத்து ஓர் செய்யுளில் சிவம் எங்கே தோன்றும், அது தோன்றற் குரிய உள்ளம் எப்படி பண்பட்டிருத்தல் வேண்டும் என்பதை தெள்ளத் தெளிவாக அடிகள் விளக்குகிருர். நலத்தைக் கொழித்து நாளுமோங்கும் கங்கை நதியைத் தன் முடியின்பால் வைத்துள்ள சிவன் எனும் செம்மேனியம்மான் ஒரு பெருங் கடல். அக்கடலில் இருந்து மணிவாசகனெனும் மேகம் நீரை முகந்தது. அம் மேகம் ஓயாது பொழிந்த மாமழைத் தண்ணீரே திருவாசக மாகும். அத்தகு தண்மை வாய்ந்த திருவாசகமெனும் நீர், ஓதுகின்ற பக்திப் பெருமக்கள் உள்ளம் என்னும் ஒளி பொருந்திய குளத்திற் புகுகிறது. பின்னர் நாவென்கிற மதகின் வழி நடந்து, எதிரில் அமர்ந்து பரவசத்தில் பண் பட்ட மக்களுடைய செவி எனும் மடையில் செவ்வையாகப் பாய்ந்து, உள்ளமென்னும் நிலத்தில் தேங்குகிறது. அந் நிலத்தில் நட்ட அன்பெனும் விதை சிவம் என்ற மென் முளை விட்டு வளர்ந்து, கருணை மலர்ந்து முடிவான முத்திப் பயன் அளிக்கிறதென்கிருர் அடிகள். எவ்வளவு எளிதில் சிவத்தின் உள்ளத்தோற்றத்தைப் புகட்டுகிருர் அடிகள் என நோக்கின் நம் உவகைக்கு அடைக்குங் கல்லுண் டாமோ?

அகவல்

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்தல குவப்ப வுகந்த மாணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி

யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்தற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே.

வாதவூரடிகளுக்கு ஏற்றங் கற்பிக்க வந்த சிவப்பிரகாசர் சிவபெருமானை நிந்திப்பதைப்போலப் பாடி உண்மைப் பொருளை தூய முறையில் எடுத்து இசைத்தல் ஒருபால் நகைப்பிற்கும், மற்றோர்பால் அன்பின் பெருக்கத்திற்கும் நிலைக்களனாய் உள்ளது. நலம் மலிந்த வாதவூர் நல்லிசைப் புலவர் பெருமகனே! மனம் நின்று உருக்கிடும் மதுரமாகிய வாசகத்தை யருளும் பெரியீர்! திங்களைச் சடையின்பால் கொண்டுள்ள தெய்வநாயகன், ஒரு கலையேனும் உணராதவன். கைகளில் ஒன்றும் ஒழுங்குடையதல்ல; எல்லாம் முறிபடுங் கைகள்; கண்களில் ஒன்று காலையில் தோன்றும்; இன்னொன்று மாலையில் தோன்றும்; மற்றொரு கண் யாராவது ஒருவர்பழித்திடினே விழித்தெரிந்து மாய்க்கும். அஃதோ நெற்றிக்கண். அப்படியிருந்தும் அம்பெருமானை நீ புகழ்ந்துரைத்து செய்யுட்கள் எழுதியிருக்கின்றாய் அல்லவா? இதனால் எனக்கு என்ன புலனாகிறது? என்பை அணிபவனாகிய சிவன் இங்ஙனம் உயர்த்திப் பாடப்படுகின்ற பாடல்கள் தனக்கு புகழ்ச்சி என்றெண்ணுகிறானே யொழிய இகழ்ச்சி என்றெண்ணவில்லையே.

அவன் ஒரு கலையாலும் உணரப் படாதவன் என்பதும், பெருமான் கூத்து நிகழ்த்துங்கால், கைகள் ஒரு புறமாக வளைந்து செல்வதோடுமன்றி, தன் கைகளில், மான், உடுக்கை, தீ இவற்றைப் பிடித்தவண்ண முள்ளானென்பதும், பெருமான் உடைய ஒருகண் சூரியன், மற்றொன்று சந்திரன், இன்னொன்று நெற்றிக்கண் என்பதும், எப்பொழுதும் திரிபுண்டரத்தை அணிந்து சுடுகாட்டில் என்பு மாலைகளையே யணிந்து ஆடிடும் பெருமான் என்பதே அறிய வேண்டிய உட்பொருளாம்.

அகவல்

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனகின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
ஒருகலை யேனு முணரா னஃதான்று
கைக ளோமுறி படுங்கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி ஞென்று விழிபி னெரியு
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனுற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணி வோனே!

திருவாசகத்தைக் கசடற ஓதி அன்பால் விளைந்த ஆரமுதத்தை யுண்டு திளைத்த சிவப்பிரகாசர் கூறுகிறுர். என்ன கூறுகிறுர்! வாதவூரன்பனே! பூவென்று சிறப்பித்துக் கூறப்படுவது தாமரைப் பூவே! (பொறிவாழ்பூ) அஃதேபோல் பாட்டென்று சிறப்பிக்கப்படுவது நின் பாட்டே என்கிறுர்.

அகவல்

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
மாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே!

புலவர்கள் மெய்வாக்கில் படுகின்ற புகழ்ச்சிக்குரிய ஒன்று எவ்வளவு உயர்வடைகின்ற தென்பதை உன்னி நோக்கல் வேண்டாமா? மக்களுள் ஒரு சிலர் திருவாசகம் கண்மூடித்தனமாய் படிப்பதைக் காண்கிறேம். கசிந்துருகா வன்னெஞ்சக் கள்வ மனத்துடன், பாடும் சிலரையும் காண்கிறேம். இன்னும் நாட்டிலே ஒரு சிலர் இருக்கிறுர்கள். அவர்கள் அபூர்வப் பிறவி பெற்றவர்கள் என்றே கூறின் தகும். திருவாசகத்தை ஒருவர் படிக்கக் கேட்டாலோ அன்றி அந்த அமுத ஒலி எவ்வீட்டிலிருந்து

வந்ததாயினும் அதனைக் கேட்டோ ஏதோ ! அவல ஒல நிகழ்ச்சி விளைந்திருக்கிறது என்று தயங்காது கூறுகின்ற ஒரு சிலரும் உளர். இவர்கள் வாழ்வில் சிறப்பார்களோ ? சிவப்பிரகாச அடிகளாற் எவ்வளவில் திருவாசகத்தில் ஊறிப் படிந்திருக்க வேண்டும் என்பதற்கு மேற்காட்டிய உதாரணங்களே சாலும் அல்லவா ? அத்தகைய உள்ளம் அல்லவா சைவ நன்மக்களிடம் நிலை பெறுதல் வேண்டும். அங்ஙனம் நிலை பெற்ருல் இறைவனின் இன்னருட் பேறு எளிதில் அன்ரே கிட்டும் ! வழியைக்காட்டி, இதுவே இன்பபுரிக்குச் செல்லும் பாதை என்று ஒரு கெழுதகை அறிஞர் கூறினுல், அதை ஏற்காது வாளாவிடுத்து நின்ருல் அங்கு தோன்றுவது தவரு நன்மையா ? தவறு தானே ! அத்தவறு யாரைச் சாரும் ? வழியைப் பின் பற்றிச் செல்லாதவரைத்தானே ? வழியறிந்து செல்லாத மக்கள் யார் ? புன்னெறியிற் பயின்றுழலும் தமிழக மக்களேதான் ! புன்னெறி நீக்கி, நன்னெறி புகட்டி, இறைவன் பேரூருக்கு வழிகாட்டுபவர் யார் ? சிவப்பிர காசர்தான் ! அடிகளார் புகட்டும் வழியில் தமிழகம் செல் லின் சீர்பெறும் எனின் மிகையோ ?

---

6. கலைப்பகுதி

' ம ழை '

(ஆர். இராசரத்தினம் அம்மையார், M.A., L.T.)

மழை என்ற சொல்லைக் கேட்டவுடனே உள்ளம் குளிர் கிறது. உவகை மிகுகின்றது. மாந்தர்க்கு மட்டுமா இத் தகைய உணர்ச்சி எழுகிறது ? செடி கொடிகளும், வானம் பாடி முதலிய பறவைகளும் தலை தூக்கி வானத்தையே நோக்கி நிற்பதேன் ? இப்பெற்றியினுலேயே வள்ளுவனர் “ வான் சிறப்பு ” என்று ஓர் அதிகாரம் வகுத்து ஆண்டு மழையின் பெருமையினைப் பரக்க உரைத்துள்ளார். உல கத்தைக் குறிக்குங் காலத்தும் ' வானேக்கி வாழும் உலகம் ' என்ருர்.

உலகத்தில் தருமம் செம்மையாக நடைபெறுமானுல் வானம் பொய்யாது என்பது பெரியோர் துணிபு. ஒரு

மன்னனை வாழ்த்தப் போந்த ஔவைப்பிராட்டியானவர் 'வரப்புயர' என்று வாழ்த்தினராம். வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான் என்பது அம் மூதாட்டியாரின் முதிர்ந்த அனுபவத்தில் பழுத்ததோர் உண்மையாகும். 'அன்னமயம் பிராணமயம்' என்பதற்கேற்ப, 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!' என்று வழங்கிவருகிற தொடரும் இதனையே வலியுறுத்துகின்றது. அத்தகைய சிறப்பினையுடைய உணவுப்பொருள்கள் விளைய மழை இன்றியமையாததன்றோ? இம் மழையானது பரமனருளாலன்றி, பொழிவதெங்ஙனம்? செயற்கை முறைகளால் பனிக்கட்டியைத் தெளித்து மேகத்தைப் பொழியச்செய்வது இயற்கை மழையைப்போல் அத்தனை சிறந்த பயனுடையதல்ல வென்பது பல்லோர் துணிபு.

இயற்கையை ஒட்டிப்பார்த்தால் ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையும் இருத்தல் வேண்டும். இதனையே மாதம் மும்மாரி என்று பண்டையோர் புகழ்ந்தனர். அவ்வாறு மழைபொழிந்தால் விளைவு குன்ருது. மேலும் நோய்க் கிருமிகள் செயலற்றுப்போம். இக்காலத்திலோ வெனில் ஆண்டு மும்மாரி பொழிதலே அரிதிலும் அரிதாக இருக்கிறது. இதனைக் கண்ணுற்ற வைதிகர்கள் ஆகாய வெளியில் இடையருது ஆகாயவிமானம் பறப்பதும், மின்சாரக் கம்பிகள் எங்கும் பின்னிக் கிடப்பதும், காற்றிலும் மேகத்திலுமுள்ள நீர்ப்பசையை இழுத்து வற்றச் செய்கின்றன. ஆகையால்தான் மழை பொழிவதற்கான நீர்ப்பசையானது இல்லாமற் போய்விட்டது என்று காரணங் கற்பிக்கின்றனர். மேலும் ஆஸ்திகம் குன்றி நாஸ்திகம் தலை ஓங்கி இருத்தலினுலேயே மழைக்கடவுள் வெகுளி கொண்டு உலகத்தைத் தண்டிக்கிருர் என்பர். காரணம் எதுவாயினும் மழையை உண்டாக்கும் உபாயத்தினை மேற்கொள்ளவேண்டியது நமது கடமையாகும்.

பல நாட்டினரின் பழக்கங்களையும் பார்க்குங்கால் மழையை வேண்டிப் பெற்றவர்கள் பெரும்பாலும் பெண்களே என்று தெரிகிறது. உதாரணமாக பர்மா தேசத்தில் மழை பொழியத் தவறினுல் பெண்களை நோன்பு நோற்கச்

செய்து, கடவுளை வழிபட்டு வெறுங்குடங்களுடன் குறிப் பிட்ட மலைகளுக்குச் சென்று, அங்குள்ள நீரினைக் குடத்தில் நிரப்பிக் கொண்டுவரச் செய்வார்களாம். அவ்வாறு அப் பெண்கள் நீர் நிறைந்த குடங்களுடன் மலையிலிருந்து இறங் கும்போதே மழையும் பொழியுமாம்.

ஏன்? நம்முடைய திருவள்ளுவரும் ஒரு சுருக்கமான வழியை வகுத்துத் தந்துள்ளார் அல்லவா? “தெய்வம் தொழா அள், கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை” என்றார். கற்புடைய மங்கையரால் ஆகாத காரிய மில்லைபோலும். தங்கள் நலனையும் உலகத்தவர் நல னையும் விரும்பியே திருவாதிரை நோன்பு அல்லது மார்கழி நோன்பு நோற்கப்பட்டு வருகிறது. மலையாள தேசத்திலும் செட்டிநாட்டிலும் இவ்வழக்கமானது இப்பொழுதும் இருந்து வருகிறது.

தமிழ் இலக்கியங்களாகிய திருப்பாவையும், திருவெம் பாவையும், இப்பாவை நோன்பினைப் பற்றி விரிவான முறையில் கூறுகின்றன. இந்நூல்கள் எழுந்த காலத்தில் மழையானது பொய்க்காமல் பொழிந்து வந்தது. ஆயினும் பக்த சிரோமணிகளாகிய ஆண்டாளும், மாணிக்கவாசகப் பெருமானும், பிற்காலத்தில் எப்போதேனும் வானம் பொய்த்தலும் கூடும். ஆகையால், அப்போது உதவவேண்டு மென்னும் உயர்ந்த நோக்கத்துடன் இப்போதைக்கு அப் போதே பாடிவைத்தனர் போலும். இவ்வரிய பாடல்களை முறையாக ஓதிவந்தால் மழைவளம் குன்றாது என்பது திண்ணம்.

ஆண்டாள் எழுதிய நூலுக்குத் திருப்பாவை என்று பெயர். அதில் 30 பாடல்கள் அடங்கியுள்ளன. மணிவாசகர் எழுதியது திருவெம்பாவை எனப்படும். அது 20பாடல்களைக் கொண்டது. இரு நூல்களும் மார்கழி மாதத்தில் பாடப் பட்டவை. இவ்வாசிரியர்கள் இருவரும் தங்களுக்குக் கடவு ளருள் வேண்டியும், உலகவர் மழையையும், நீராடுதலுக்கு வேண்டிய நீரையும் பெறவேண்டுமென்றும் விண்ணப்பித் துக் கொண்டுள்ளனர்.

பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராகிய ஆண் டாள் கண்ணனைக் குறித்துத் தன் திருப்பாவையுள் பாடி யுள்ளார். ஆண்டாள் தன் பாவனு சக்தியினுல் கோகுலத்

தில் உதித்த கோபிகைகளுள் ஒருத்தியாகி, கண்ணபிரானுடைய அருளைப் பாடிக் கொண்டே நீராடச் செல்லுகிறார். செல்லும் வழியிலே உள்ள தன் தோழிகளையும் அழைத்து அவனுடைய கீர்த்தியைப் பாடும்படித் தூண்டுகிறார். அவ்வாறு செய்வதால் தங்களுக்குக் கடவுள் அருளும், உலகத்தோருக்கு மழையும் உண்டாகும் என்னும் குறிப்பினைக் கொண்ட செய்யுளைப் பார்ப்போம்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடுகயல் உகள,
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளற்பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

இதன் கருத்து: மகா விஷ்ணுவானவர், நெடுமாலாய் அவதாரஞ் செய்து உலகத்தை மூன்று அடியாக அளந்த பெருமையைச் செப்பி, பாவை நோன்பு நோற்றால், உலகத்தில் துன்பம் ஏதும் இன்றி, நாட்டில் மாதம் மும்மாரி பெய்து, அதனால் விளைவு மிகும். நெற்பயிரிடையே, தேங்கியுள்ள நீர் வளத்தினாலே, கயல் மீன்கள் துள்ளி விளையாடும். அழகிய நீல மலர்களைப் படுக்கையாகக் கொண்டு வண்டுகள் உறங்கும். மக்களும் நிறைமனத்தினராய்ப் பால் பாக்கியத்தைப் பெற்று மகிழ்ந்திருப்பார்கள். இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் மழைதான். ஆகையால் மழைக் கடவுளை நோக்கிப் பின் வருமாறு பாடுகின்றனர்.

" ஆழிமழைக் கண்ணா ! ஒன்றும்நீ கைகரவேல் !
ஆழியுள் புக்கு முகந்து கொடுஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து,
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,
வாழ உலகினில் பெய்திடாய் ! நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்."

மழைக் கடவுளே! நீ கடல்போலப் பரந்து தோன்றி, கடலில் புகுந்து அங்குள்ள நீரை யெல்லாம் எடுத்துக் கொண்டு ஆகாயத்தில் ஏறிவந்து எம்பெருமான் மேனி போலக் கறுத்துத் தோன்றி, வலிய தோளிணையுடைய பத்ம நாபனுடைய கையிலிருக்கும் சுதரிசனம் என்னும் சக்கரம் போல மின்னலை மின்னச் செய்து, அவனுடைய மற்றொரு கையிலுள்ள சங்கைப்போல முழங்கி இடி இடித்து, பகைவர்களைக் கண்டவுடனே அவன் எவ்வாறு காலந் தாழ்த்தாமல் சார்ங்கம் என்னும் வில்லினை உதைத்து அம்பு மழை பொழிவானோ அவ்வாறே நன்றாக மழையைப் பொழியக் கடவாய். அப்பொழுதுதான் உலகமானது வாழ்ந்திருக்கும். மேலும் அப்பிரவாக நீரில் பெண்களாகிய நாங்களும் நீராடி நோன்பு நோற்க இயலும் என்ற கருத்தைக் கொண்ட பாடல் இரசிக்கத் தக்கது. கடவுளுடைய அருள் மழையையும் கருணை மழையையும் வேண்டி உலகத்தவருக்கு நன்மை புரிய எண்ணிய ஆண்டாளின் பரந்த நோக்கத்தைப் போற்றுதல் வேண்டும்.

இம்முறையிலேயே நமது சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகப் பெருமானும், தாம் திருவண்ணமலையில் வாழ்ந்து வருங்கால், மார்கழித் திங்களில் அங்குள்ள பெண்கள் வைகறையில் துயிலெழுந்து ஒருவரை யொருவர் கூவி அழைத்துச் சென்று நீராடி அண்ணமலையான் அடியிணைகளைத் தொழுதிறைஞ்சியதைக் கண்ணுற்று, அப் பெண்கள் பாடுவது போலத் ‘ திருவெம்பாவை ’யைப் பாடியருளினர். திரு - பரிசுத்தமான, எம் - எம்முடைய, பாவாய் - பெண்ணே! அதாவது 9 சக்திகளும் தொழில் புரியும் முறையைக் காட்டுகிருர். இவரும் நீராடற்குவேண்டிய மழையையும், நடராஜப் பெருமானுடைய அருள் மழையையும் வேண்டி நிற்கின்ருர். உதாரணமாக,

“ முன்னிக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மைஆள் உடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு

முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் ''

மேகமே நீ கடலில் புகுந்து நீரைக் குடித்து, அதனால் கடலில் நீரில்லாமற் செய்து, நீயுண்ட நீரையெல்லாம் ஆகாயத்தில் சேர்த்து, சூலுண்ட கருமேகமாகச் செழித்து எம்முடைய தலைவியாகிய மாயோளைப் போன்ற கருமேனியைத் தாங்கி, உமையம்மையின் இடையில் தோன்றும் மேகலையைப்போல மின்னல்கள் மின்னப் பெற்று, அவளுடைய திருவடியில் ஒலிக்கும் சிலம்பொலிபோல் இடி இடித்து முழங்கி, அவளுடைய அழகிய வளைந்த புருவம் போல மழைவில்லை வளைத்து அவளுடைய நாயகனுடைய அன்பர்க்கு அவள் அருள்புரியுமாறுபோல நீ மழை பொழிதல் வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறார்.

மாயோளாகிய துர்க்கை, பெண்ணின் தன்மையை ஏற்றுக் கொள்ளுங்கால் நவசக்திகளுள் ஒருத்தியாகிறாள். அவளே மழைபொழியக் கருணை கூரவேண்டுமென்று வேண்டப்படுகிறாள். அவளே ஆண் தன்மையை ஏற்றுக் கொள்ளுங்காலத்தில் மாயோன் என்னும் பெயருக்கு இலக்காகி மைவரை நிலத்துத் தலைவனாகின்றான். அந்த மாயோன் மூர்த்தத்தில் ஈடுபட்ட ஆண்டாள் அவனைக் கண்ணனாகவும், இராமனாகவும் பெயரிட்டழைக்கிறாள். இத்தகைய பெருமை வாய்ந்த திருப்பாவையையும், திருவெம்பாவையையும் படித்துப் பயனுறுவது தமிழராகிய நமது கடமையாகும். மேலை நாட்டிலிருந்து நமது நாடு போந்த திரு. போப் ஐயரவர்கள் சைவசமய நூலாகிய திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். தமிழ் மொழியில் திருவாசகத்தையும், திருவெம்பாவையையும் படித்து இரசிக்க முடியாத அன்பர்கள் போப் ஐயர் அவர்களுடைய ஆங்கிலப் பதிப்பையேனும் படித்துப் பயனுறுவார்களாக. ஆண்டு முழுவதும் வைகறையில் படிக்கலாம். முடியாவிடில் மார்கழி மாதத்திலேனும் படிக்கவேண்டும். அதுவும் இயலாவிடில் முடிந்த காலங்களிலேனும் படித்து, அதன் பொருளைப் பிறருக்குங்கூறி, ஆண்டாளும், மாணிக்கவாசகரும்போல் பிறர் இன்புறக் கண்டு மகிழ்ந்து வாழ்வோம். பொழிக பெருமழை; வாழ்க வையகம்!

தமிழ்முனிவன் திருமலை

அன்றும் இன்றும்

(கணியர் டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை)

அன்று

கடலை ஆடையாக உடுத்த இம்மண்ணுலகத்திலேயே முதன்மைபெற்று விளங்கும் மலைகள் நம் இந்தியாவிலே தான் இருக்கின்றன. கங்கை, சிந்து முதலிய பெரிய ஆறுகளுக்குப் பிறப்பிடமாக உள்ள இமையமலையைப் போலும் பெரிய மலை இந்த உலகத்திலே வேறு எங்கே இருக்கிறது? அதனுடைய உச்சியைக் காண அறிஞர் பலர் வீர உணர்ச்சியுடன் விடாது முயன்றும் அஃது இன்னும் முடியாத செயலாக அன்றோ உளது? பார்ப்பவர் அச்சத்தாலும் வியப்பாலும் இமையாது பார்த்து நிற்கும் படி செய்யும் பெருமை யுடைமையினலேதான் புலவர் இதனை இமையம் என்று வழங்கினர் போலும்! இமம் என்பது பனி. அதாவது பனிக்கச் செய்தலினலே பனி என்ற பெயர் ஆயிற்று. பனித்தலின் முதிர்ந்த நிலைமையே இமையாது நிற்கும் நிலை; அதனைச் செய்தலினலே பனி இமம் எனப்பட்டது போலும்! இமை, இமைப்பு என்பன ஒரு பொருட் சொற்கள்; இமைப்பு என்பது பேரொளி; பகலவன் கதிரொளி படும்போது இமத்தால் மூடி யிருத்தலினலே, கண்ணைப் பறிக்கும் பேரொளியுடன் இம்மலை விளங்கும். அதனல் பேரொளி விளக்கம் உடையது என்னும் பொருளில் இமையம் என்ற சொல் ஆயிற்று என்று கொள்ளுதலும் ஒருதலை.

இமையமலை இவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், அது சிறிது காலத்திற்கு முன்புதான் தோன்றிய தெனக் கல்நூல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்; அவர்கள் அம்மலையின் கல்லை ஆய்ந்து பார்த்தபோது அது சில காலத்தின் முன்புதான் அமைந்திருக்க வேண்டும் என்ற உண்மை வெளியாயிற்று. அது சில நூற்றாண்டுகளுக்கு

முன் கடலினுள்ளே முழுகியிருந்தது என்பதை அம்மலை மிசைக் காணப்பெறும் கடல்வாழ் உயிர்களின் உடற் கூடுகள் முதலிய சான்றுகளைக் கொண்டு அறிஞர் நிலை நாட்டுகின்றனர்.

'ஒப்புயர்வற்ற இமையமலையின் நிலைமையே இவ்வாறு யின் வேறு எம்மலைதான் முதலில் தோன்றிய பெருமை யுடையது?' என வினவின், அது தண்டமிழ் நாட்டின் கண் உயர்ந்து விளங்குகிற பொதியமலையே. இதுவே நமது தமிழ்முனிவன் திருமலை. கல்நூல் ஆராய்ச்சியாளர் இம் மலையின் கல்லை ஆராய்ந்து இம்மலைதான் உலகத்திலேயே மிக முதியது என்று அறுதியிட்டுரைக்கின்றனர். உயிர் நூல் ஆராய்ச்சிப்புலவர்கள் மக்கள் முதலில் தோன்றிய இடம் எனக் கூறும் தமிழகத்தின் ஒரு பகுதியாக இம்மலை அமைந்திருக்கிறது. ஆதலின் இமைய மலையினும் தொன் மையில் முதன்மை பெற்று, புலவர்களால் பெரிதும் புகழப் பெற்றது பொதிகை மலையே என்பது வெள்ளிடை மலை போல் விளங்குவதாயிற்று.

'சந்தனப் பொதிகைத் தடவரை'' என்றார் புலவர். சந்தனம் முதலிய மரங்களினாலே பொதிந்து வைக்கப் பெற்றது பொதிகைமலை ; இது பொதியம் என்றும் பெயர் பெறும் ; பொதி என்ற சொல்லுக்குப் பிணிப்பு, தொகுதி, முளை, அரும்பு என்ற பொருள்கள் இருக்கின்றன. இவை களினால் திப்பிழம்பாகச் சுழன்று கொண்டிருந்த பூமியில் பல அணுக்கள் ஒன்றாகத் தொக்குப் பிணிக்கப்பட்டு இறுகிய முதல் இடம் இது என்பதும் அறிஞர் ஆராய்ச்சி யில் தோன்றுவது. இம்மலையிலிருந்து தோன்றும் தென் றற்காற்று, சந்தன மரங்களிற் படிந்து அவைகளின் நறு மணம் கலந்து உலாவி வரும்போது தமது உடலில் வீசப் பெற்றோரே நல்வினையாளராவார். சிவபெருமானார் தாம் கூத்தாடும்போது தோன்றும் இளைப்பை நீக்கிக் கொள் ளும்பொருட்டு, 'ஆரம் மென்கால் திருமுகத்திடை வீசி மடுக்கவும் தமிழ் திருச்செவி மாந்தவும் அன்றோ தென் திசை நோக்கி அடுக்கவந்து உவந்து ஆடுவார்?' எனத் திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதியார் கூறு கின்றார். இம்மலையை அடுத்துள்ள திருநெல்வேலியில் வந்தருளிய சைவ சமய ஆசிரியராகிய திருஞான சம்பந்த

மூர்த்தி நாயனார் தமது தேவாரத்திலே 'தென்றல் வந்து உலவும் திருநெல்வேலி' என அருளிச் செய்திருக்கிறார்.

இச்சந்தன மரங்களே யன்றி, ஏனைய தேக்கு, வேங்கை, மா முதலிய மரங்களெல்லாம் இம்மலையில் வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்து நெருங்கி இருக்கின்றன. பெரிய பெரிய மரங்களெல்லாம் வெட்டப்பட்டு மலை காடுகளெல்லாம் பணம்பற்றி அழிக்கப்படுகிற இக்காலத்திலுங்கூட, பகலவனது ஒளி நுழையப் பெறாத பூமரச் சோலைகள் இம்மலைமேல் அளவிடற் கரியனவாய்க் காணப் பெறுகின்றன. இம்மரச் சோலைகளே பொதிகை மலையின் கைகளைப்போல மேலே போகின்ற மேகக் கூட்டங்களை யெல்லாம் பிடித்து, அங்குமிங்கும் அசையவிடாமற் பிணித்து, மிகுதியாக மழை பொழியச் செய்கின்றன.

யானைகள் மந்தை மந்தையாகக் கூடி மேய்ந்து திரிகின்ற இப்பொதிகையிலே தண்டமிழ் முனிவராம் அகத்தியனார் எழுந்தருளி யிருக்கின்றனர். அவருக்குப் பழைய பாவநாசம் என்னும் இடத்தில் ஓர் அழகான கோவில் திகழ்கிறது; அவருக்கு அம்பாசமுத்திரம் என்னும் ஊரிலும் ஒரு பெரிய தனிக் கோவில் இருக்கிறது. அவர் பல அன்பர்களுக்கு நல் வரந்தந்து வாழ்விக்கும் பெருமை யுடையவர்; அவர் வாழும் பொதிகை முடியிலிருந்தே தான் பொருநைப் பேராறு தோன்றுகிறது. தண் - குளிர்ச்சி. தண் பொருந்திய தன்மையால்தான் இது தண் பொருநை என்று பெயர் பெறுவதாயிற்று; தண் பொருநைதான் தாம்பிர வருணி என்று பிறமொழியாளரால் திரித்து வழங்கப் பெற்றது. இதிலிருந்து தாமிரம் கலந்திருக்கும் நீரையுடையது என்று சிலர் பொருள் கூறவும் நம்பவும் தலைப்பட்டனர். ஒத்தைக்கல் மந்து என்பது ஆங்கிலேயரால் ஒட்டகமண்டு என்று மருவி வழங்கப்பெற்ற பின் உதக மண்டலம் எனச் சிலர் அறியாது வழங்கத் தொடங்கியதோடு நில்லாமல் உதகம் - பனி, பனி மண்டிலம் என்று தம் அறியாமைக்கு ஒரு பொருள் கூறவும் தொடங்கி யிருப்பது போன்ற வழக்கே தாமிர பர்ணி என்பதுவுமாம்.

பொருநையாறு இம்மலை மிசைத் தோன்றிக் கீழ் நோக்கி ஓடி வருகிறது. இது தோன்றும் இடம் சதுப்பு

நிலமாக எப்போதும் தண்ணீர் ஓடிக்கொண்டே இருக்கிறது. இது சிறிது தூரம் வந்தவுடன் கன்னிகட்டி என்ற ஓரிடம் இருக்கிறது. அவ்விடம் மரச்செறிவுள்ளதாய்ப் பேரழகினதாய் விளங்குகின்றது. இங்கே தங்கிடம் ஒன்றிருக்கிறது. அதிலிருந்து சிறிது தூரம் இஃது ஓடிவந்து, வாணதீர்த்தம் என்னும் இடத்திலே மிக்க உயரத்திலிருந்து அருவியாக விழுகிறது. வாணன் முழுகி அருள் பெற்ற தீர்த்தம் இது என அறிஞர் கூறுகின்றனர். சிலர் இது வானத்திலிருந்து விழுவதுபோல மிக உயரத்திலிருந்து விழுவதினாலேயே வானதீர்த்தம் என்று பெயர் பெற்றதெனக் கூறுகின்றனர். உடலைப் பற்றிய அழுக்கையும் தகையையும் தீர்த்து வைப்பது போலவே உயிரைப் பற்றிய பாவத்தையும் தீர்த்து வைப்பது தீர்த்தம். ஆதலின் அவ்வருவியிலே நீராடுவதற்கு ஆடி மாதத்தில் வரும் இருள்மதியன்று ஆண்டுதோறும் மக்கள் பலர் பல இடங்களிலிருந்தும் பெருங் கூட்டமாக இங்கே வருகின்றனர். மலையடியிலிருந்து ஏறிப் பல மலைகளைத் தாண்டி இங்கே வந்து நீராடுவதன் அருமைபற்றி, "வாணனைக் கொடுத்து வாணதீர்த்தம் ஆடி" என்ற பழமொழியும் வழங்குவதாயிற்று.

இதற்குச் சிறிது கீழே கட்டளைமலை என்னும் இடம் இருக்கிறது. இம்மலைப் பகுதி பண்டு பாவநாசருடைய பூசனைக்குக் கட்டளையாக அமைந்திருந்தமையின் இப்பெயர் பெற்றது. இவ்விடத்தில் காரியாறு என்பது தண்பொருநையுடன் கலக்கிறது. இவ்விடத்தில் ஒரு பெரிய ஆழம் நீலகண்டன் கசம் எனப் பெயர் பெறும். இங்கே இப்போது பெரிய அணை ஒன்று கட்டப் பெற்றிருக்கிறது. அதனால் கட்டளை மலையில் ஒரு பகுதியும் காரியாறும் இந்த அணையிற் கட்டும் நீரில் முழுகி விடுகின்றன. இவ்வணை ஏற்படு முன் கட்டளை மலைத் தோப்பில் பல அருமையான பழங்களைத் தின்று கொண்டு நண்பருடன் அளவளாவி வாணதீர்த்தத்தை நோக்குவார் உள்ளம் அடையும் இன்பத்திற்கு ஓர் எல்லையும் உண்டோ? காரியாறு நஞ்சாறு; அதில் கோடையில் நீர்குடித்தவர் கொடுமையான காய்ச்சல் பெற்றுத் துன்புற்றனர்.

இதற்கும் கீழே சேர்வையாறு என்னும் சிற்றாறு பொருநையில் வந்து சேர்கிறது. இரண்டாறுகள் முண்

டும் துறையாதலின் அக்கூடிடம் முண்டந்துறை எனப் பெயர் பெறும். இவ்விடத்தில் ஒரு பெரிய தங்கிடமும் மலைக்காவலர் குடியிருக்கும் வீடுகளும் இருக்கின்றன. இவ்விடத்திலுள்ள ஆழத்தில் முதலைகள் பல உள்ளன. இங்குள்ள தோணியில் ஏறி உகைத்து மகிழ்வுடன் இன்னிசை பாடி இன்புறலாம். பொருநைப் பேராறு பின்னும் கீழ்நோக்கி வந்து கலியாண தீர்த்தம் என்னும் இடத்தில் அருவியாக விழுகிறது. அகத்தியனார் சிவபெருமானுடைய கலியாணக் காட்சியைக் கண்டு பணிந்து அருள்பெற்ற இடம் இத்தீர்த்தக் கரையாதலினாலேதான் இவ்விடம் இப் பெயர் பெற்றது போலும்! இவ்வருவியில் நீராடுவது கடினம். ஏனெனில் இது மிகவும் சிக்கலான இடத்திலே முந்நூறடி உயரத்திற்கு மேலிருந்து விழுகிறது. இவ்வருவியிலே தலையைக் கொடுத்து முழுகுவது மிக இன்பந்தருவதாகும். இங்கிருந்து சிறிது தூரம் சென்றவுடன் ஆறு மலையிலிருந்து நிலத்தில் இறங்குகிறது; இவ்விடம்தான் பாவநாசம் எனப் பெயர் பெறும். இவ்விடத்திலேதான் முக்களாலிங்கர் கோவில் இருக்கிறது. முக்களாலிங்கரே பாவநாசப் பெருமான். கோயிலின் வாயிலில் அமைந்துள்ள மண்டபத்திலே முழுமதி நாளன்று இருந்து கொண்டு கிழக்கே அதனடியிலிருக்கும் யாற்றை நோக்கின், புலனாகும் இயற்கைப் பேரழகு எடுத்தியம்ப முடியாத மேன்மையுடையது. (தொடரும்)

---

8. விரிவுரைப்பகுதி

சேக்கிழார் செய்யுள் நலம்

1. செய்யுள் வளமை :—செம்மொழியாக வளர்ச்சி பெற்றிருக்கும் எந்த மொழியிலும் குறிப்பாக எடுத்துக் காட்டக்கூடிய சில பாகுபாடுகள் உண்டு. அப்பாகுபாடுகள் அம்மொழியின் வளர்ச்சியைக் காட்டக்கூடிய நிலைகளைக் கொண்டதாய் ஒன்றின்மேல் ஒன்றாய் உயர்ந்து செல்லக் கூடிய படிகள் போன்ற அமைதிகளைப் பெற்றிருக்கும். அவைகள் ஒவ்வொன்றிலும் ஒன்றோ, இரண்டோ சிறந்த

நூல்கள் எடுத்துக்காட்டுகளாக நிற்கும். அந்நூல்களை இயற்றிய புலவர்கள் அப்பகுதிக்கு இலக்கியகர்த்தாக்களாக விளங்குவார்கள். அப்படிப்பட்ட இலக்கிய கர்த்தாக்களில் ஒரு சிறந்த புலவர் சேக்கிழார் ஆவார்.

தமிழ் இலக்கியத்திலே சரிதப் பாகுபாடுகள் பல உண்டு. அவைகள் முறையே பண்டைக்காலம், சங்ககாலம், சமண பௌத்த காலம், பெருங்காப்பிய காலம், சைவ வைணவ மறுமலர்ச்சிக் காலம், காவியகாலம், உரைகண்டு இலக்கணக்காலம், சிறுபிரபந்த காலம் முதலியன. இப்பாகுபாட்டில் சேக்கிழார்பெருமான் காவியகாலத்திற்குச் சேர்ந்தவர். அக்காலத்தில் கம்பரும் சேக்கிழாரும் மிகச் சிறந்த புலவர்கள். கம்பர் இயற்றமிழ்காவியத்திற்கும், சேக்கிழார் சமயத்தமிழ் காவியத்திற்கும் பிரதிநிதிகள் ஆவார்கள். மொழிக்கும், சமயத்திற்கும் ஒருங்கே பணியாற்றி அவ்விரண்டிற்கும் பெருமை தந்த புனிதப்பெரியார் சேக்கிழார் பெருமானே ஆவார்.

சேக்கிழார் எடுத்தாண்ட செய்யுள் வளமைக்கு மூன்று சிறந்த கருவிகள் உதவியாக அமைந்து இருந்தன. அவைகள் ஏற்றகாலம், ஏற்ற ஆட்சி, ஏற்ற சமயம் ஆகும். முதலில் காலத்தை எடுத்துக்கொள்ளுவோம். சேக்கிழார் தோன்றிய காலம் காவிய காலமாகும். அதாவது கி.பி. 10-ம் நூற்றுண்டுமுதல் 12-ம் நூற்றுண்டுவரை அடங்கிய ஒரு சிறந்த காலம். அப்போதுதான் தமிழர் பண்பாடு மிக உயர்ந்து வெளிநாடுகளுக்கும் பரவிச் சென்றது. வெளிநாடு என்ருல் தமிழகம் முழுவதும் மட்டும் அல்ல. வட இந்தியா மட்டும் அல்ல. பெருங்கடல் கடந்து, வங்கம் ஏறி, கீழ்க் கடல்களில் இருக்கும் தீவுகளுக்கும் சென்றது ஆகும். அத்தனை மேன்மைபெற்ற தமிழ்ப் பண்பாட்டிற்கு அடிகோலிக் கொண்டது அதனுடைய பண்டை வளர்ச்சியேயாகும். தொல்காப்பியனுர் முதற்கொண்டு, சைவ வைணவ மறுமலர்ச்சிக்காலம் மட்டும் செந்தமிழ் ஒரு ஒப்பற்ற வளர்ச்சியடைந்து சோழர் காலத்தில் உச்ச நிலை அடைந்தது. அதனுல் தமிழர் பண்பாடு மிக உயர்ந்த நிலை பெற்றிருந்தது. அப்போதுதான் தமிழர்களுடைய ஒற்றுமைப் பண்பும், கலைஉணர்ச்சி மேன்மையும், பிறர்க்கும் உணர்த்தி வைக்கும் ஊக்கமும் ஒருங்கே அமைந்திருந்தன. அந்தக் காலம்

சேக்கிழார் அவதரித்த காலம். ஆகவே காலத்திற்கேற்ற பண்புகள் அவர்க்கு உதவி புரிந்தன அல்லவா ?

இரண்டாவதாக, அக்காலத்து ஆட்சியை எடுத்துக் கொள்வோம். பண்டைநாளில் சேரசோழ பாண்டிய மண்டலங்கள் என்ற முப்பிரிவுகளாகத் தமிழ்நாடு இருந்தது. சங்கத்தார் நாளில் இம்மூபெரும் வேந்தர்களோடு ஏழு வேளிர்களும் குறுநில மன்னர்களாக ஆண்டார்கள். அக்காலத்தில் ஒவ்வொரு சிறு நாட்டிற்கும் பகையும் போரும் இருந்தன. அவ்வகைப் பிரிவினை பல்லவர்காலத்தில் சிறிது தளர்ந்தது. தமிழ் நாட்டின் பெரும்பகுதியை அவர்கள் உட்படுத்தி ஆண்டார்கள். அவர்களுக்குப் பிறகு விசயாலயச் சோழர் வமிசம் தோன்றி தமிழ்நாட்டின் முழுப் பகுதியையும் தன்வசப்படுத்த முயன்றது. அந்த வம்சத்தில் தான் தமிழின் பெருமை உலகெங்கும் செல்லத் தொடங்கியது. இராசராஜன் I, இராசேந்திரன் என்ற கங்கை கொண்ட சோழன் என்றவர் காலத்தில் தமிழ்ப் பண்பாடு வடக்கே கங்கைமட்டுமோ, கிழக்கே சாவகம் ஈழம் முதலிய தீவுகளுக்கும் சென்றது. தமிழர்களுடைய அரசு தன்னுரிமை பெற்று விளங்கியது. அக்குடியில் தோன்றிய குலோத்துங்கன் நாளில் சேக்கிழார் தோன்றினர். (அனபாயன்) சோழனுக்கு அமைச்சராகவும் திகழ்ந்தார். ஆகவே அவர் தமிழ் ஆராய்ந்த ஆட்சியும் சிறந்ததல்லவா ?

இனி மூன்ருவதாக ஏற்ற சமயமும் வாய்த்தது. முன்னே சமணர் புத்தர் ஆதிக்கம் இருந்தது. அதனை அப்பரும் சம்பந்தரும் தொலைத்தார்கள். சைவம் மேம்பாடு அடைந்தது. சமயாசிரியர்களை ஒட்டி மற்றைத் திருமுறை ஆசிரியர்களும் தோன்றினர்கள். திருமுறைகள் ஆராயப் பெற்று ஒருங்கு திரட்டப்பெற்றன. சோழர்கள் காலத்தில் தான் சேக்கிழார் அவதரித்தார். அதற்கு முன்பே பதினெரு திருமுறைகள் திரட்டப்பட்டன. சேக்கிழார் தோன்றியபோது சைவசமயம் பக்குவம் அடைந்திருந்தது. அரசர்கள் தூய சைவர்கள். மிகப்பெரிய ஆலயங்களை எழுப்பினர்கள். தஞ்சை இராசராசேச்சரம் முதலிய பெருங் கோயில்கள் நாடெங்கும் தோன்றின. ஆலயங்களுக்குச் சோழர்களும் செல்வர்களும் கணக்கற்ற நிபந்தங்களைத் தந்தார்கள். அப்படிப் பக்குவம் அடைந்த சைவத்திலே சேக்

கிழார் தோன்றினர். அவருடைய சைவப் புலமைக்கு ஏற்ற நிலைமை கிடைத்தது. ஆகவே காலம், ஆட்சி, சமயம் இம் மூன்று நிலைகளிலும் சேக்கிழார் தோற்றம் சிறந்து விளங்கிற்று.

2. பயன்படுத்திக் கொண்ட முறை:—காலம், ஆட்சி, சமயம் என்ற மூன்று பண்புகளையும் சேக்கிழார் பெருமான் பயன்படுத்திக்கொண்ட முறை மிகவும் போற்றத் தக்கது. அவ்வாறே ஏனைய மொழிகளிலும் ஏனைய பெருங் கவிகள் செய்துள்ளார்கள். ஆங்கிலப் பெருங்கவிகளாகிய ஷேக்ஸ்பியர், மில்டன் என்ற அறிஞர்களும் அவ்வாறே தங்கள் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆகவே சேக்கிழாரும் பெரும்புலவர் ஆகையினால் தம் சூழ் நிலைகளை மிகவும் பயன்படுத்திக்கொண்டார். அம்முறையை ஆராயும்போது பண்பாடு, உண்மை, வளர்ச்சி என்ற முப் பிரிவுகளில் நாம் எடுத்தாளலாம்.

தமிழர்கள் பண்பாடு (நாகரீகம்) மிகவும் வளர்ந்து வந்த பண்பாடு, அது தம் நாட்டளவில் ஒடுங்கி நிற்கவில்லை. கடலைத் தாண்டியும் பிறநாடுகளுக்குச் சென்றது. அதனை நேரில் கண்டவர் சேக்கிழார். ஆகவே தாம் இயற்றி வெளியிடும் நூற் கருத்துக்களையும், பிறர் அறியவேண்டும். அதன்படி ஒழுகவேண்டும். நாடெங்கும் பரவவேண்டும் என்று எண்ணினர். அரசனிடம் சைவப் பெருமைகூறி, அதனை விளக்கி நூலாக எழுத ஆணையும் பெற்றார். மிகப் புனிதத்தலமாகிய சிதம்பரத்தில் வீற்றிருந்து அருமையாகப் பாடியருளினர். அது எல்லாருக்கும் பயன்படும்படி தக்க முறையில் எழுதினர். எழுதினதுமட்டுமேயல்ல. அரசன் முன்னிலையில் தாம் அமர்ந்து அதனை விளக்கவும் செய்தார். ஓர் ஆண்டளவில் அரசவையில் நாட்டார் குழுமியிருக்க விரிவுரை நிகழ்த்துவாரேல் அப்படிப்பட்ட பிரசாரத்தின் தன்மை பலனையும் கூறவும் வேண்டுமா? சேக்கிழாரின் தீவிர உபதேசம் நாடெங்கும் பரவிற்று. அந்தப் பிரசாரம் அக்காலத்தில் பண்பாட்டுப் பரவலே அன்றி வேறல்ல. அதனையே அவரும் எடுத்தாண்டார்.

இனி இரண்டாவதாக உண்மை ஆராய்தல், பிறகு அதனைக் கூறுதல். சேக்கிழார்பெருமான் சோழனுடைய அமைச்

சர். மிகுந்த புலமை பெற்றவர். அக்காலத்து அரசியல் கருத்துக்கள், நாட்டு நடப்புக்கள், பழைய சரிதம் முதலி யவைகளை நன்கு அறிந்தவர். ஆகவே தான் அறிந்த செய்தி களில் உண்மை, பொய் இரண்டையும் ஆராய்ந்து அறிந்து உண்மைகளையே கூறும் பெருமை வாய்ந்தது. அவரது நூலிலும்கூட உண்மை வரலாறுகளை நன்ருக எடுத்துக் கூறினவர். வேறு தமிழ் நூல்களைக்காட்டிலும் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் மிகுந்த நாட்டுச் சரித வர லாறுகள் இருக்கக் காண்கிறோம். தில்லைக்குப் பொன் வேய்ந்தது, வடபுலத்தில் வாதாபித் தொன்னகரம் துகளா கத் தமிழர்கள் அழித்தது; வழக்கு வென்ற அம்பலத்தைச் சுட்டியது; மணம்வந்த புத்தூர் கண்டது; "தத்தா நமர் காண்" என்ற பிரயோகத்தை உட்கொண்டது முதலான பல சான்றுகள் உண்மை அறியும் கொள்கையை நிரூபிக்கி றது. மூன்ருவதாக உணர்ச்சி ததும்பப் பாடிய நெறி மிக வும் போற்றத்தக்கது. முன்னுளில் பல புலவர்கள் மக்க ளிடம் பரிசு பெறுவதற்கு மக்களையே போற்றிப் பாடினுர் கள். அது சிறப்பாகச் சங்கத்தார் நாளில் இருந்தது. சுந்தர மூர்த்திகளோ மக்களைப் பாடாமல் இறைவனையே பாடுதல் நன்று என வற்புறுத்தி, "தம்மையே புகழ்ந்து" என்றதிருப் புகலூர்த் தேவாரத்தில் அதனை வற்புறுத்தினுர். இதன் பிறகு சேக்கிழாரும் அந்த உண்மையை ஆதரிக்கின்ருர்.

சேக்கிழார் பெருமான் தாம் கூறும் செய்திகளை முற் றும் உணர்ச்சி ததும்பப் பாடுகிருர். மனிதர்களைத் தோத் தரிப்பதைக்காட்டிலும் இறைபணி நிற்றலையே வற்புறுத்தி யிருக்கிருர். தன் உடல், தன் மனைவி, தன் மக்கள், தம் சொத்து, தம் வீடுவாசல், தன் கௌரவம் இவைகள் சிறி தும் நிலையல்ல என்று கண்டு அவைகளை இறைவன் பொருட்டு எத்துணையேனும் விட்டுவிடலாம், தியாகம் செய் யலாம் என்ற கொள்கையே பெரிய புராணம் முழுவதும் எடுத்தாளப்படுகிறது. இந்தத் தியாகச் செயல்களுக்கு அளவற்ற உதாரணங்கள் காணலாம். இச்சரிதங்கள் மிக வும் உணர்ச்சி எழுப்பும் உதாரணங்கள்.

ஆகவே பண்பாடு, உண்மை விளம்பல், உணர்ச்சி எழுப்பல் இந்த மூவகையிலும் சேக்கிழார்பெருமான் அக் காலத்துச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ளுகிருர்.

3. செய்யுள்நடை : தமிழர் பண்பாட்டை உண்மையான வழியில் புகட்டி மக்களில் உணர்ச்சி ததும்பும்படி அக்காலச் சூழ்வினை வாய்ப்பப் பயன் படுத்திக் கொண்ட வகையில் சேக்கிழார் அதற்கு ஏற்ற செய்யுள் நடையைக் கையாண்டு இருக்கிறுர். அவருடைய நடை தெளிவும் எளிமையும் கொண்டு உயர்ந்த கருத்துக்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு எவரும் அறியும்படியாக வருணிக்கப்பட்டுள்ளது. இம் மூன்று பண்புகளையும் எவ்வாறு ஆண்டிருக்கின்ருர் என்பதைச் சற்று ஆராய்வோம்.

முதன் முதலில் ஏற்பட்டிருந்த சங்கத்தார்காலத்துத் தமிழ்நடையைச் சிறிது கவனிப்போம். சிறுசிறு சொற்களாலும் இரும்புக் கடலைபோலக் கடினமாக நடையிருக்கும். அறிஞர்களுடைய உரை இன்றி எவரும் எளிதில் பொருள் கொள்ளலாகாது.அந்தச்செய்யுள்நடை மிகத்தேர்ச்சிபெற்ற புலவர்களுக்கு ஏற்றது. பொதுமக்கள் அதனை அறிந்து கொள்ள இயலாது. சங்கத்தாருக்குப் பிறகுவந்த பெருங் காப்பியங்களும் அதே கடின நடையில் இருக்கக் காணலாம். சைவ வைணவ மறுமலர்ச்சியில் நடை இலகுவாயிற்று. ஆனுல் அவைகளெல்லாம் துதிநூல்களே யாகும். வரலாறுகளோ, செய்திகளோ அங்கு இல்லை. ஆகவே தெளிவான வரலாற்று நூல்கள் தேவையாக இருந்தன. சேக்கிழார்தான் முதன்முதலாகத் தெளிவானதும்,எளிமையானதும் ஆனநடையில் வரலாறுகளை எழுதத் தொடங்கினுர். நாயன்மார் சரிதங்கள் எவரும் எளிதில் அறியும்வண்ணம் தெளிவான செய்யுளில் இயற்றியவர் அப்பெருமானே ஆவர். நடை எளிமையாகவும், தெளிவாகவும் இருக்கலாம். ஆனுல் உயர்ந்த கருத்துக்கள் அவைகளில் உண்டோ என்று கேட்கலாம். சைவ சித்தாந்தத்தில் உள்ள உயரிய கருத்துக்கள் எல்லாம் இவர் நூலில் மணிகள்போல மிளிருகின்றன. வெறும் கதை அல்ல. கதை உருவத்தில் உயர்ந்த பண்புகளை வேறு எந்த நூலாசிரியரும் எழுதியவையல்லன என்று கூறக்கூடிய பெருமையில் சேக்கிழார் எழுதியிருக்கின்ருர். அப்பரும், சம்பந்தரும் சந்தித்த பகுதி, அப்பூதிகள் அப்பரை வரவேற்றபகுதி, கண்ணப்பர் மலைக்கு இழுக்கப்பட்ட பகுதி இவைகளைப்போல வேறு எந்த உயர்ந்த கொள்கை நிரம்பிய பகுதி பிறரிடம் உண்டு ? ஆராய்க.

இனி மூன்ருவதாக, வகுத்துக் காட்டும் வருணனையைக் கொள்ளலாம். நீதிச் சொற்கள், அகப்புறப் பாட்டுக்கள், துதிகள் முதலியன வெகு உருக்கமாகக் கூற முடியும். அவைகளை மனப்பாடம் செய்யலாமே ஒழிய நெஞ்சில் நிலைநிறுத்தக்கூடிய வன்மை பெரு. ஆனுல் சேக்கிழார் செய்யுள் நடையோ அவ்வாறல்ல. கருத்துக்களைப் பலபாடல்களால் வருணித்து ஆற்றுநீர்ப் பொருள்கோள் போல எடுத்தாளுவது காவியக் காலத்திற்கு முந்தி இல்லை. ஒருவாறு முதல் மூன்று பெருங்காப்பியங்கள் கூறக்கூடும். ஆனுல் சேக்கிழாரின் வருணனையோ செம்பாகமாக எவரும் மறக்க முடியாத நிலையில் செல்வது ஆகும். ஒரு ஆறு தோன்றின இடமாகிய மலையிலிருந்து, அடிவாரம், பள்ளத்தாக்கு சமநிலம் முதலியவைகளின் வழியே விடாமல் ஓடி இறுதியில் கடலை அடைகிறது. வழியில் அணைகள், குளங்கள் முதலியன எவை வந்தாலும் தன்போக்கை விடாது செல்லும். அதுபோல சேக்கிழாருடைய வருணனை இடையில் எப்படிப்பட்ட உவமைகள், அணிகள் முதலியவை தோன்றினுலும் அங்குத் தங்கிவிடாமல் எடுத்த ஒழுங்கைப் பின்பற்றி கதை வருணனையே பெரிதாகக் கொண்டு முடிவடைகிறது. திருக்குறிப்புத் தொண்டர், கண்ணப்பர், ஏயர்கோன்கலிக்காமர் இவ்வரலாறுகளில் பிறவருணனைகள் வந்தாலும் சரிதத்தை விடாமல் மீண்டும் வருணிப்பதை அறியலாம். ஆகவே செய்யுள்நடை தெளிவும் எளிமையும் கொண்டு தொடர்ந்து வருணிப்பது ஆகும்.

4. போக்கு : சேக்கிழார்பெருமான் தன் நடையை தெளிவாகவும், எளிமையாகவும், ஆனுல் உயர்ந்த கருத்துக்களைப் புகுத்தி அவைகளுக் கேற்றபடி வருணனைகளைப் புகட்டி யிருக்கிருர் என்று சொன்னேம். அவ்வாறு ஒரு சிறந்த நடை செய்யுளில் புகுத்தியபோது அதனை எந்தப் போக்கில் செலுத்துகிருர் என்று அறிய வேண்டாமா? அந்தப் போக்கு கதை உருவமாக அமைக்கப் பெற்று ஒழுங்கான முறை ஒன்றைக் கொண்டு, அதற்கு ஏற்ற உவமை அணிகளை அழகு படுத்தும் வகையில் எடுத்தாளப்பட்டுள்ளது.

மக்களை வசிகரிப்பது கதைதான். வெறும் நீதி மொழிகள் எவரையும் வசிகரிக்கா. கதைகளை ஒட்டிய நீதிகளோ

எவரையும் வசீகரித்து மனதில் நிலை நிற்கும். அதுபோலவே சமய ஒழுக்கமும் சமயத்தையும் நன்ருக மக்களிடை பரப்பவேண்டும் என்ருல் கதை வரலாறுகளால்தான் முடியும். ஓர் அரசனுடைய மூடமக்களை அறிவுறுத்த ஐந்து தொடர்கதைகளை இதோபதேச ஆசிரியர் சொல்லவில்லையா? தற்போதும் வெறும் இன்னிசை விருந்தைக் காட்டிலும் கதாகாலக்ஷேபம் மக்களை வசீகரிப்பதில்லையா? கூத்துக்களும் ஒலிஒளிப் படங்களும் ஏன் ஆயிரக்கணக்கான மக்களை இழுக்கின்றன. இந்த உளவு கதைப்போக்கில் இருக்கின்றது. சமய அன்பைப் புகட்டுவதற்குச் சேக்கிழார் அடியார்களுடைய வரலாறுகளைத் தெரிந்தெடுத்து இதே இரகசியக் கொள்கையைக் கொண்டு என்று அறிய வேண்டும் அக்கதைகளில் உணர்ச்சி பொங்குவதற்காக மானிட வாழ்க்கையை ஒட்டிக் கூறிக்கொண்டு செல்லுகின்ருர். படிக்கிறவன் கதை படிக்கிருேமா அல்லது படத்தைக் காண்கிருேமா என்று வியக்கும்படி எடுத்துக் கூறுகிருர்.

இனி, கதை கூறும் முறையும் சிறந்ததுதான். ஒவ்வொரு வரலாற்றையும் தொடங்கும்போது நாடு, ஊர், குடி இவைகளின் சிறப்புக்களைக் கூறி, கதாநாயகனின் பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, குலம், செயல், அரிய செய்கை, அதனுல் பெற்ற பயன் இவைகளை முறையே கூறிக் கொண்டு செல்லுகிருர். படிக்கிறவன் ஒருவருடைய வாழ்க்கைச் சித்திரத்தை நேரில் காண்பதுபோல் வருணிக்கிருர். மேலும் இக்கதைகள் கட்டுக் கதைகளோ என்று பிறர் எண்ணுதபடி ஒவ்வொரு அடியார் வரலாற்றிற்கும் ஆதாரம் வைத்துக் கொண்டே செல்லுகிருர். முதலில் திருத்தொண்டத் தொகையில், சுந்தரமூர்த்திகள் சொன்ன பெயர்க் குறிப்புக்களை எடுத்துக்கொண்டு, பின்னர் நம்பியாண்டார் நம்பிகள் கூறிய செய்யுட்களில் கண்ட விரிவுகளை வைத்துக் கொண்டு தன்வரலாற்றைத் தொடங்குகிருர். இவ்வாறு கூறுகையில், நாட்டில் வழங்கும் வரலாறுகள், தலங்களில் காணும் விழாக்கள், அடியார்கள் கூறியுள்ள செய்யுட் கருத்துக்கள் இவைகளை நன்ருக ஆராய்ந்தறிந்து நூலை இயற்றியிருக்கிருர். இந்த முறை ஆங்கிலப் பெருங்கவி ஷேக்ஸ்பியர் கொண்ட முறையாகும். இந்த முறை மிகவும் சிறப்புடையதல்லவா?

இனி எக்காவியத்திலும் வெறும் யாப்புமட்டும் இருந்தால் போதாது. அது மக்களை வசிகரிக்காது. யாப்பில் அணிகளும் இருக்கவேண்டும். அணியில் உவமை, உருவகம், தற்குறிப்பு, உள்ளுறை உவமம் முதலிய பலவகை அணிகளும் இருக்கவேண்டும். அவைகளே ஒரு காவியத்திற்கு அழகு நல்குவன. ஒரு நீரோடை இருந்தால், அது வெள்ளத்தைப் பெற்று நேராக ஓடி குளத்திலோ வேறொரு ஆற்றிலோ விழுந்தால் அதற்கு என்ன அழகு இருக்கிறது. அதன் இடையிடையே சிறு திடல்கள், குழிகள், சுழல்கள், தாமரை முதலிய கொடிகள், இருபக்கங்களிலும் தாழைப் புதர்கள், தென்னை கமுகு தோப்புகள் இவைகள் இருந்தால் அவ்வோடை எத்தனை அழகாக இருக்கும். அதுபோல் அணிகள் ஆற்று நீர்ப் பொருள் நோக்காக இருக்கும் தொடர்நிலைச் செய்யுளை அணி நிறைந்த காவியமாகச் செய்யும். அந்தச் செழிப்பைச் சேக்கிழார் அறிந்து தனது நூலில் கையாண்டிருக்கின்றார். ஆகவே போக்கில், கதை, முறை, அணி இவைகளை உட்கொண்டு தன் செய்யுளை வளப்படுத்தி யிருக்கிறார் என்றறிக.

5. பொருள்: உணர்ச்சியுள்ள உயிர்களுக்கு அவா ஏற்படுதல் இயல்பு. அவ்வவா பலதிறப்படும். மேலான நிலையில் அது அன்பு எனப்படும். பொதுவான நிலையில் அது காதல் எனப்படும். இந்நிலைகள் புறப் பொருளிலும், அகப்பொருளிலும் காணலாம். புறப்பொருளிலே உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகள் கூறப்படுகின்றன. அரசு, அமைச்சு, நாடு, கல்வி வாணிபம், முதலியன புறப்பொருள் எனப்படும். இவைகளைச் சேக்கிழார் தள்ளவில்லை. வாழ்க்கைக்கு அவை இன்றியமையாத வகையில் இருப்பதால் கூறவேண்டிய இடங்களில் அவைகளைப் பற்றிக் கூறிக்கொண்டே செல்லுகிறார். மக்களுக்கு இன்பம் தரும் விளையாடல்களையும் பொருள்தரும் வாணிபத்தையும், அரசர்களுக்குக் களிப்புதரும் வேட்டை, ஆடல், பந்தாடல், ஆட்டுப்போர் முதலியவைகளையும் கூறுகிறார். ஆகவே புறப்பொருள் பிற்காலத்திற்கு ஏற்புடைத்தாக இல்லாவிடினும் உலக வாழ்க்கைக்கு வேண்டியபடியால் அவைகளைக் கூறாமல் இருக்கவில்லை.

இனி அகப்பொருளில் காதல் என்ற உலக இன்பம், பேரின்பம் என்ற உயர்ந்த இன்பம் உண்டு. மக்களுடைய உலக வாழ்வில் இன்பப்பகுதி மிகவும் உண்டு. பல அடியார்கள் வாழ்க்கைகளைக் கூறும்போது, காதற் சிறப்பைப் பற்றிக் கூறுகிறார். சுந்தரமூர்த்திகளுடைய வரலாற்றில் அவருடைய இரண்டு மணங்களிலும் காதற்சுவை பரிமளிக்க வெகு அழகாக வருணிக்கிறார். அந்த இடத்திற்கு அச் சுவைபொருந்திய பாடல்கள் மிகவும் வேண்டும். ஆனால் சம்பந்தர் பூம்பாவையை எழுப்பின பிறகு அந்தப் புனித மங்கையை அப் பெரியார் காதற் கண்களோடு பார்க்கவில்லை. தந்தை மகளைக் காணும் கண்களோடு பார்க்கிறார். இங்கே சேக்கிழார் பாராட்டியுள்ள பேத உணர்ச்சி தெளிவாகத் தெரியவரும்.

கண்ணப்ப நாயனருடைய சரிதத்தில் திண்ணனர் திருக்காளத்தியை அடைந்தவுடன் குடுமித்தேவரைப் பார்த்தார். அப்போது ஊசியைக் காந்தம் இழுக்கிற நிலையில் அன்பு ஏற்பட்டது. அவ்வன்பு ஆறுநாள்களில் முதிர்ந்து பேரின்பம் ஆயிற்று. இதனைச் சேக்கிழார் வெகு உருக்கமாகக் காட்டுகிறார்.

உலக வழக்கிலே சிற்றின்பமாகத் தோன்றுவது அன்பு முதிர்ச்சியினால் பேரின்பமாக மாறும். அதனால் தான் பேரின்பத்தை விளக்கவந்த நாயன்மார்கள் தங்கள் பாடல்களில் அகத்துறையில் அருமையாகப் பாடல்களை ஓதியிருக்கிறார்கள். முடிவில் பேரின்பத்தில் எல்லா உணர்ச்சியும் முடிவுபெற வேண்டும் என்பது சேக்கிழார் கருத்து.

இனி அவாவில் மற்றொரு நிலையாகிய பற்று என்பதனையும் சேக்கிழார் உணராதிருக்கவில்லை. பற்றில் சிறந்த பகுதிகள் மொழிப் பற்றும், நாட்டுப் பற்றுமேயாகும். செந்தமிழின்மீது சேக்கிழார் கொண்டிருக்கும் பற்று வியக்கத்தக்கதே ஆகும். பெரியபுராணம் இல்லாவிடில் செந்தமிழ் ஒரு பெரிய பகுதியையே இழந்ததாகும். இலக்கியத்திலே அது ஒரு சிறந்த ஒப்பற்ற இடம் பெற்றிருக்கிறது.

நாட்டுப் பற்றிலோ, சேக்கிழாருக்கு இருப்பதுபோல் வேறெவர்க்கும் இல்லை. தடுத்தாட்கொண்ட புராணத்தில் சோழநாடும், மூர்த்தி புராணத்தில் பாண்டிநாடும், திருக்

குறிப்புத் தொண்டர் புராணத்தில் தொண்டைநாடும், சேரமான் புராணத்தில் மலைநாடும் மிக விரிவாகப் புகழப் பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் எவ்வாறு சேர, சோழ, பாண்டியர்களில் தலைநகரங்களான, புகார், வஞ்சி, மதுரை புகழப் பட்டனவோ அவ்வாறே சேக்கிழாரும் புகழ்ந்ததை நோக்கும்போது, தமிழ்நாட்டுப் பற்று எந்த நிலையில் அவர் கொண்டார் என்று கூறவும் வேண்டுமா ? இந்தவகையில் பொருளைக் கூறும்போது அன்பு, காதல், பற்று மூன்றை யும் ஆண்டார் எனலாம்.

6. சமயம் : பொருளைப் பற்றிச் சேக்கிழார் கருத்து கூறப்பட்டது. பொருள் உலகப்பொருளே யன்றி பேரின் பப் பொருளும் உண்டு என அறிந்தோம். அப் பேரின்பப் பொருளே மெய்ப்பொருள் ஆகும். அதனை உணர்த்துவது சமயம். மற்றப் பற்றுக்கள் சாதாரணமானவை. சமயப் பற்றே உயர்ந்த பற்று. அவ்வுயரிய சமயப்பற்றை சேக் கிழார் ஒவ்வொரு நாயன்மார் சரிதையிலும் எடுத்தாளு கிறார். நாயன்மார்கள் உலகப் பெருமைக்காக வாழவே இல்லை. பேரின்பம் அடைவதற்கே வாழ்ந்தார்கள். அந் தக் குறிக்கோளே அவர்களுக்கு இருந்தது. அதற்காகத் தம், உடல், பொருள், ஆவி எல்லாமே தத்தம் செய்தார்கள் என்பது சேக்கிழார் குறிப்பாகும்.

திருத்தொண்டர் புராணம் சமய நூலாக எழுந்ததி னால் சமயப் பெருமைகளையே அது கூறுகிறது. வாழ்க்கை யிலே உயரிய கொள்கை பொருள் திரட்டுவது அல்ல. புகழ்பெறுவது அல்ல. மனைவி, மக்களை அடைவது அல்ல. இறைபணி நிற்றலே உயரிய கொள்கையாகும் என்று நிரு பித்தார். அவ்வித உயரிய கொள்கையையே நாம் குறிக் கோளாக வைத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வித உயரிய கொள்கையில் ஆழ்ந்து முதிர்ச்சி அடையவேண்டும் என்பது அவர் கருத்து. பல வரலாறு களிலும் கொள்கையின் முதிர்ச்சியையே ஆண்டிருக்கிறார். அவ்வாறு கொள்கையின் முதிர்ச்சி அடைந்தால் பிறகு அதன் முழுப்பலனும் கிடைக்கும். அப்பயன்தான் பெறுதற் கரிய வீடு ஆகும். அந்தப் பயனைப்பற்றி ஒவ்வொரு சரிதத் திலும் மிகவும் தெளிவாகவும் உருக்கமாகவும் கூறுகிறார்.

ஆகவே, சமயப் பற்றில் உயரிய கொள்கை முதிர்ச்சி யடைந்து தக்க பலனை அளிப்பதனைச் சிறப்பாக உணர்த்து கிறார்.

7. உள்ளொளி : சமய வாழ்க்கையின் பயன் உள் ளொளி பெருக்குதலே யாகும். அதனை மாணிக்கவாசக னார் உள்ளொளி பெருக்குதலை வற்புறுத்திப் பாடியிருக் கிறார். (பால் நினைந்தூட்டும் தாய்) உள்ளொளிப் பெருக் கினால் மலம் நீங்கும், சிவப்பேறு கிடைக்கும்.

நாம் பலவிதங்களிலும் அறியாமலே குற்றங்களைச்செய் கிறோம். அறிந்தும் செய்பவர்களைப் பற்றிக் கவலை இல்லை. அறியாமலே செய்கிறவர்கள் ஒருமுறை அறிந்து கொண் டால் பிறகு செய்யத் துணியார்கள். அவ்வாறு குற்றங் குறைகளை அறிந்துகொண்டால் நாம் செய்ய மாட்டோம். பிறகு குற்றம் நீங்கும். மலங்கள் தாமே விலகி ஓடிவிடும். மலங்கள் நீங்கி நாமும் குற்றம் அற்றவர்கள் ஆகிவிட்டால் பிறகு சிவப்பேறு தானே கிடைக்கும். அச் சிவப்பேறே இறுதிப்பயன். அதனைத்தான் ஒவ்வொரு நாயன்மாரும் அடைவதற்காக அவ்வித அமர வாழ்க்கை எல்லாரும் பெறக்கூடும். அதனை மக்கள் பெறும்பொருட்டே சேக் கிழார் திருத்தொண்டர் புராணம் செய்தார். அதுதான் அவரது செய்யுள் நலத்தைக் காட்டுகிறது. அதனை நன்கு படித்து நாம் உய்வோமாக.

செய்தித் திரட்டு

23 - 2 - 52. சைதாப்பேட்டை திருவள்ளுவர் செந் தமிழ் சிவநெறிக்கழகம், திருக்காரணீஸ்வரர்கோயில்-புலவர் முருகேசனார் சிவராத்திரி விரிவுரை நிகழ்த்தினார்.

24 - 2 - 52. ஷை முருகப்பிரான் திருக்கோயிலில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தலைமையில் திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார், "சைவத் தமிழ்த் தொண்டு" என்பதைப் பற்றிப் பேசினார்.

24 - 2 - 52. திருவாவடுதுறை ஆதினக் கரந்தைப் புல வர் கல்லூரி இளங்கோ அடிகள் தமிழ்க்கழகம் 14-ம்

ஆண்டுவிழா. ஆசிரியர் சி. இலக்குவனர் தலைமையில் விழா நடத்தப்பெற்றது. பல விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன.

29 - 2 - 52. பெருவளநல்லூர் நந்தியடிகள் குருபூஜை, ஓமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில், புலவர் அ. நடேச முதலியார் அவர்கள் பேசினார்கள்.

2 - 3 - 52. திருவள்ளுவர் படிப்பகம், கோவை 2-வது ஆண்டுவிழா: சித்தாந்த ஆசிரியர் தலைமையில் புலவர் சுந்தர ராசனார், "படிப்பகங்களின் பயன்" என்பதைப்பற்றியும், புலவர் அரசங்கண்ணனார் "கலியில் கண்ட அரசியல்" என்பதைப் பற்றியும், திருக்குறள் முனிசாமி M. P. அவர்கள் "வள்ளுவர் கண்ட அரசியல்" என்பதைப்பற்றியும் பேசினார்கள். மிக அரிய கருத்துக்கள் கூறப்பட்டன.

6 - 3 - 52. கோனுபட்டுத் திருவாசக விழா: குன்றக்குடி மகாசந்நிதானம் தலைமையில் திரு. ச. கணேசன், திரு. திருநாவுக்கரசு, கலைமணி அமிர்தவல்லி என்ற அறிஞர்கள் பேசினார்கள். கூட்டுப் பிரார்த்தனை சிறப்பாக நடந்தது.

9 - 3 - 52. கோவை ஸ்ரீ கோணியம்மன் திருவிழா, உபந்யாசங்கள் புரிசையார் உட்பட, பல பெரியார்கள் பேசினார்கள். திருத்தேர், தரிசனம் முதலியன சிறப்பாக நடைபெற்றன.

8, 9, 10, மார்ச்சு, 52. திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடம்: மகத்திருவிழாவும் சங்கத்து 36வது ஆண்டுவிழாவும் நடைபெற்றன. முதல் நாள் திருவாசக விழா, 2-வது நாள் குருபூஜையும் சங்க விழாவும், 3-வது நாள் பேருரைகள், மாகேசுரபூஜை. மூன்றுநாளும் குன்றக்குடி மகாசந்நிதானம் தலைமையில் பல பெரியார்கள் பேசினார்கள். சிறப்பாக திருவையாறு மாணிக்கவாசகத் தம்பிரான், அரசர்கல்லூரி கோவிந்தசாமி பிள்ளை, திருவாசகமணி, உலக ஊழியர், குழந்தையம்மாள் முதலியோர்கள் பேசினார்கள். மாணவ மாணவிகள் உரையாடல் நடைபெற்றது. பரிசுகள் வழங்கப்பெற்றன.

12, 13 - 3 - 52. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் திருவள்ளுவர் திருநாள்: முதல் நாள் திரு. T. P. மீனாட்சிசுந்தரனார் தலைமை. 2 - வது திரு. R. P. சேதுப்

பிள்ளை தலைமை. பல அறிஞர்கள் பங்கெடுத்துக்கொண்டார்கள். மகாசந்நிதானம் ஆசி உரை அளித்தார்கள்.

17 - 2 - 52. திரிசிரபுரம் சைவசித்தாந்த சபை அருள் திரு ஞானியார் அடிகள் திருநாள் : திரு. கீ. இராமலிங்க முதலியார் தலைமையில் புலவர் அ. நடேச முதலியார் " அன்பின் வெற்றி " என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். மேலும் சென்ற ஓர் ஆண்டாகத் தாயுமானவர் திருப்பாடல்களுக்கு விரிவுரை நடத்தப்பெற்று வருகிறது. அதன் ஆண்டு விழா திரு. பாஸ்கரத் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது. 24 - 2 - 52-ல் 2-வது ஆண்டு துவக்கநாள் நடைபெற்றது. சித்தாந்த வித்தகி திரு. ஈஸ்வரவடிவு அம்மாள் "சேக்கிழார் கண்ட சேயிழையார்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். இச்சபை சென்ற 67 ஆண்டுகளாகச் சிறந்த திருத்தொண்டு செய்து வருகின்றது

20 - 2 - 52—9 - 3 - 52. கோவை சேக்கிழார் திருக்கூட்டம் சென்ற 19 நாட்களாக இரத்தின விநாயகர் திருக்கோயிலிலே பாகவதத்தைப் பற்றி ஒன்பது விரிவுரைகளும், இலட்சுமீ நிவாசத்தில் இராமாயணத்தைப் பற்றிப் பத்து விரிவுரைகளும் திரு. பி. சினிவாசராகவ ஆசாரிய சுவாமிகள் நிகழ்த்தினார்கள். வடமொழி மேற்கோள்களோடு தமிழ்ப் பாசுரங்களையும் கூறினது போற்றத்தக்கது. வைணவத்தோடு சைவபரமும் விளக்கப்பட்டன.

13 - 3- 52 முதல் 17 - 3 - 52 வரை சீர்காழி திருநிலை நாயகிசமேத ஸ்ரீபிரம்மபுரீசர் சுவாமிக்கும் திருஞானசம்பந்தப் பெருமானுக்கும் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெறும். திருமுறை பாராயணம், தேவார பாராயணம், சைவசித்தாந்த மகாநாடு முதலியவைகள் நடைபெறும். அன்பர்கள் வந்திருந்து இறைவன் அருள் பெறுவார்களாக.

திருப்பனந்தாள்-செந்தமிழ்க் கல்லூரி (14 - 3 - 52) 8-வது ஆண்டு நிறைவு - காலை திருவள்ளுவர் திருநாள். மாலை ஆண்டுவிழா. இரவு கலைராணி தமிழ் நாடகம். 15 - 3 - 52 முற்பகல் கல்லூரிப் புலவர் சங்கம் - முதலாண்டு விழா முதலியன நடைபெற்றன. அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

மன்னார்குடி - இராசகோபாலசுவாமி கோயில் (15-3-52 முதல் 7-4-52வரை) திருத்தேர் முதலிய பெருந்திருவிழாவில் பிரபந்த பாராயணம், சொற்பொழிவுகள் நடைபெற்றன. இடையில் 26 - 3 - 52-ல் கருட சேவை வைரமுடி சேவை சிறப்பாக நடைபெற்றன.

திருப்பேரூர் - 30 3-52 முதல் 5-4-52 வரை தேர்த் திருவிழாவும் 7, 8 தேதிகளில் சிறந்த சொற்பொழிவுகளும் நடைபெற்றன. திரு. புரிசையார், சேது இரகுநாதன் முதலியோர்கள் பேசினார்கள்.

பூவாளூர் - சைவ சித்தாந்த சங்கம் 42 வது ஆண்டுவிழா: திரு. ஈசானசிவாச்சாரியார் தலைமையில் 28, 29 - 3 - 52-ல் பல அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் திருவள்ளுவர் திருநாள்: மேற்படி ஆதீனத்தில் 12, 13 - 3 - 52 இரண்டு நாள் விழா தேவகோட்டை தமிழ் வள்ளல் திரு. சேவு. மெய்யப்ப செட்டியார் தொடங்கிவைக்க முறையே திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புலவர்கள் க. ஆறுமுகனார், கி. வா. ஜகந்நாதன், அ. ச. ஞானசம்பந்தம், வை. சு. தண்டபாணி, சா. கணேசன், கா. நயினார்முகமது, அ. நடேச முதலியார், சு.ப. அமிர்தவல்லி, ஆ.முத்துசிவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்கினார்.

புதுவயல் திருவாசக விழா :—10 - 3 - 52. அன்று ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் தலைமையின் கீழ் பண்டித முத்து வேங்கடாசலம் அவர்கள் திருவாசகம் பற்றிச் சொற்பொழிவாற்ற விழா சிறப்புற நடைபெற்றது.

விருதுநகர் சைவ சித்தாந்தக் கழகச் சார்பில் 7-3-52 மாலை 8 மணிக்குச் சைவப்பெரியார் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை, B.A., L.T. அவர்கள் " ஞானசம்பந்தர் வரலாறு " என்பது குறித்துப் பேசுகையில் வார வழிபாட்டின் முதன்மை குறித்து விரிவாகவும் அழகாகவும் எடுத்துரைத்தார்.

சமாஜ அலுவலக மாற்றம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15.

சமாஜச் செயலாளருக்குச் சமாஜ உறுப்பினர்கள் கடிதம் எழுதும்பொழுது தங்கள் உறுப்பு (சந்தா) எண்ணைக் குறிப்பிடவும்.

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	அ.
பெரியபுராணம்—அகராதியுடன் ...	3	0
நாலாயிர திவ்ய பிரபந்தம் ...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் ...	1	0
திருவாசகம் மூலம் ...	0	4
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு	7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற் பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற் றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) ...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல. ...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா வீதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செல வுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 81.